# பாட்டாளி சிந்தனை

Volume 26 No. 10

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

June 2016

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3


# கட்டுக்கடங்கா ஊழல் – இன்றைய முதலாளித்துவ–ஏகாதிபத்தியத்தின் முத்திரை

இந்தியாவில் இராணுவத் தளவாடங்கள் வாங்கியதில் மற்றொரு ஊழல் அம்பலமாகியுள்ளது. இந்திய விமானப்படைக்கு 12 ஏ டபிள்யு101 (AW101) ஹெலிகாப்டர்கள் விற்பதற்காக ரூ3,200 கோடி மதிப்பிலான ஆர்டர் பெறுவதற்காக பிரிட்டனைச் சேர்ந்த அகஸ்டா வெஸ்ட்லேண்டு என்ற நிறுவனம் ரூ270 கோடிகள்வரை, இந்த ஒப்பந்தத்தை வழங்குவதற்காக விதிகளை வளைத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள, அப்போதைய இந்திய விமானப்படைத் தளபதி உள்ளிட்ட இந்திய அதிகாரிகளுக்கு லஞ்சம் வழங்கியுள்ளதாகத் தகவல் வெளிவந்துள்ளது.

பெரிய பெரிய மெகா ஊழல்கள் வெளியே வருவது ஏதோ சமீபத்தில் மட்டும் நடைபெறுவதாக நினைக்க வேண்டாம். சுதந்திரம் பெற்ற உடனேயே தொடங்கிய முந்ரா ஊழல் முதல் போபர்ஸ் வரை, ஹர்ஷத் மேத்தாவின் பங்கு சந்தை ஊழல், தெஹல்கா ரகசிய ஊழல், கார்கில் போரில் சவப்பெட்டிகள் வாங்கியதில் ஊழல், கால்நடைத் தீவன ஊழல், யுடிஐ ஊழல், தெல்கி போலி முத்திரைத்தாள் மோசடி, கேள்வி கேட்பதற்குப் பணம் கேட்டல், எம்பிக்களின் தொகுதி நிதியை முறைகேடாகச் செலவழித்த ஊழல், பாராளுமன்ற வளாகத்திற்குள்ளேயே குதிரை பேர வர்த்தகத்திற்காக பணம் பெறுவது தொடர்பாக செய்திகள் ஏற்கனவே வெளிவந்துள்ளன. மத்திய விஜிலென்ஸ் கமிஷனரை முறைகேடாக நியமித்தல், 2ஜி அலைக்கற்றை ஊழல், ஐபிஎல் ஊழல், காமன்வெல்த் விளையாட்டில் ஊழல், ஆதர்ஸ் குடியிருப்பு கட்டுவதில் ஊழல், நிலக்கரி சுரங்க மோசடி, பெல்லாரி சுரங்க ஊழல், ரயில்வே டெண்டர் ஊழல், சுடுகாட்டுக் கொட்டகை ஊழல், பால் கொள்முதலில் ஊழல், சமீபத்தில் சாரதா–ரோஸ் வேலி பொன்ஷி நிதிநிறுவன ஊழல், வியாபம் ஊழல், நாரட் ஸ்டிங் வீடியோ என ஒவ்வொரு நாளும் புதிய புதிய செய்திகள் வெளியே வருகின்றன.

கடந்த 40 ஆண்டுகளாக நமது நாட்டை உலுக்கிய மிகப்பெரிய ஊழல்களிள், உயர் அதிகாரிகள், அமைச்சர்கள், பிரதமர் மற்றும் முதலமைச்சர்கள், எம்பிக்கள், எம்எல்ஏக்கள், மேல்மட்ட பூர்ஷ்வா தலைவர்கள், இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் பெரிய தொழிலதிபர்கள் பெயர்கள் வெளிவந்துள்ளன. நீதித்துறையும் கூட இன்று ஊழலிலிருந்து தப்பவில்லை. அதிலும் குறிப்பாக, கடந்த இரண்டு பத்தாண்டுகளில், உயர்பதவிகளில் இருப்போர் ஊழலில் ஈடுபட்டிருப்பதில் அம்பலமாகியிருப்பது என்னவோ, 'பனி மலையின் முகடளவே' என்ற பழமொழிக்கு ஏற்றவாறு, குறைந்த அளவே வெளியாகியுள்ளது.

### ஊழல்களால் பாதிக்கப்படுவது மக்களே

ஊழல் என்பதை எளிய வார்த்தைகளில் விவரிக்கலாம். அது குறுகிய தனிப்பட்ட லாபங்களுக்காக தெரிந்தே முறைகேடுகளில் ஈடுபடுவது, நியதிகளை, கோட்பாடுகளை நடைமுறைகளை மீறி பணத்திற்காக மட்டுமல்லாது பணம் சாராத அதிகாரம், கௌரவம், தகுதிக்கு அதிகமான ஆதாயங்களைப் பெறுவது போன்று, மற்றவர்களை பித்தலாட்டம் செய்வது, வஞ்சிப்பது அல்லது பிறரை ஏமாற்றுவது என்று கூறலாம். நிர்வாகம் மற்றும் அதிகாரத்தின் உயர்மட்டத்தில் இருப்பவர்கள் செய்யும் தங்குதடையற்ற ஊழல் அதிகரிப்பது என்பது மக்களின் வாழ்க்கையில் மிகக் கடுமையான பேரழிவு விளைவை ஏற்படுத்தும் என்பது சொல்லாமலே விளங்கும். சாமானிய உழைக்கும் மக்கள்தான், பொருளாதாரரீதியாக அதேபோல் சமூக ரீதியாக, ஒழுக்கநெறி மற்றும் கலாச்சார ரீதியாக மிகக்

தொடர்ச்சி 2ம் பக்கம்

# "மக்களை புரட்சிகர இயக்கத்தினுள் மென்மேலும் கொண்டுவரவும் புரட்சியினை விரைவுபடுத்திடவும் நாம் சபதமேற்போம்"

### – தோழர் கிருஷ்ண சக்கரவர்த்தி

கட்சியின் 69வது ஸ்தாபக தினம் அனுஷ்டிக்கப்பட்டதையொட்டி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினர் தோழர் கிருஷ்ண சக்கரவர்த்தி அவர்கள், ஏப்ரல் 24ம் தேதியன்று பெங்களூரில் ஆற்றிய உரை:

கூட்டத்தின் தலைமைப் பொறுப்பேற்றிருக்கும் தோழர் அவர்களே, மேடையிலிருக்கும் கர்நாடக மாநிலக்குழு உறுப்பினர்களே, தோழர்களே, நண்பர்களே,

நமது அன்பிற்குரிய கட்சியின் 69வது ஸ்தாபக தினத்தை அனுஷ்டிப்பதற்காக நாம் இங்கே கூடியிருக்கின்றோம். கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், அனுதாபிகள், கட்சியின் நலன் விரும்புவோர் மற்றும் பொதுமக்கள் யாவரும் நாடு முழுவதும் இந்நாளை அனுஷ்டித்துக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் நாம் இந்நாளை அனுஷ்டித்து வருகிறோம். எக்கட்சியும் அவர்களது ஸ்தாபக தினத்தை அனுஷ்டிக்காதபோது, எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியானது அதனை ஏன் ஒவ்வொரு ஆண்டும் அனுஷ்டிக்கின்றது? என சிலர் கேள்வியெழுப்புகின்றனர். ஐயத்திடத்திற்கிடமின்றி இது ஒரு சரியான கேள்வியேயாகும்.

### கட்சி ஸ்தாபகதினம் அனுஷ்டிப்பதின் ஆழ்ந்த முக்கியத்துவம்

இந்நாளை அனுஷ்டிப்பதின் முக்கியத்துவத்தினை நிச்சயமாக தோழர்களும்கூட ஆழமாகப் புரிந்துகொள்ள வேண்டும். நாம் புரட்சி வெற்றிபெற்ற தினத்தை அனுஷ்டிக்கின்றோம். உதாரணமாக, ரஷ்யாவினுள் தீவிரமானதொரு மாற்றத்தைக் கொண்டுவந்த மற்றும் உலகம் முழுவதிலும் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்திய உலக அளவில் நிகழ்ந்த முதல் பாட்டாளி வர்க்கப்புரட்சியான – ரஷ்யாவின் நவம்பர் புரட்சி தினத்தை அனுஷ்டிக்கின்றோம். அப்புரட்சியானது ஒரு குறிப்பிட்ட சிந்தனை – அதாவது புரட்சிகர சிந்தனை ஏதுமின்றி, மேலும் ஒரு பாட்டாளிவர்க்க புரட்சிகரக் கட்சியின் வழிகாட்டலுமின்றி தன்னியல்பாகவே அதன் வெற்றியை அடைந்திருக்க முடியுமா? இல்லை, ஒரு சரியான புரட்சிகரக் கருத்தியலையும் மற்றும் தோழர் லெனினது தலைமையிலான ஒரு உண்மையான புரட்சிகரக் கட்சியையும் கொண்டிருந்ததாலுமே அத்தகைய மாபெரும் புரட்சியானது நடத்தப்பட முடிந்தது. ஒரு புரட்சிகரக் கட்சியின்றி புரட்சி ஏற்படாது; மேலும் ஒரு புரட்சிகரக் கருத்தியலின்றி புரட்சி ஏற்படாது என லெனின் அவர்களே கூறியுள்ளார். ஆக, புரட்சிகரக் கருத்தியல் மற்றும் புரட்சிகரக் கட்சி ஆகிய இரண்டும் புரட்சியின் மிக அத்தியாவசிய முன்தேவைகளாக இருக்கின்றன.

புரட்சி தினத்தை நாம் அனுஷ்டிக்கும்போது, புரட்சியினை நடத்தி முடித்து அதை வெற்றிகரமாக்கிய அக்கட்சியின் ஸ்தாபக தினத்தை நாம் அனுஷ்டித்திட வேண்டாமா? நமது கட்சியாகிய சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்) உருவான பின்னர்தான் இந்தியாவின் புரட்சிகர இயக்கம் அதன் சரியான திசைவழி அல்லது பாதையை பின்பற்றியது. அதற்கு முன்பு அவ்வாறில்லை. அதற்கு முன்பு, பிளவுபடாத சிபிஐ கட்சியின் தலைமையில் கம்யூனிசம் மற்றும் மார்க்சிசம் எனும் பெயரில் போராட்டங்கள் நடைபெற்றன. ஆனால் அவை யாவும் புரட்சிகரப் போராட்டங்களாக இருக்கவில்லை என்பது இன்று நிரூபணமாகிவிட்டது. அதே சமயம் ஒரு மாபெரும் புரட்சிகரத் தலைவரும், மாபெரும் பாட்டாளிவர்க்கத் தலைவருமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களால் இக்கட்சியான எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) ஸ்தாபிக்கப்பட்ட பின்னரே இந்தியாவில் புரட்சிகரப் போராட்டங்கள் உண்மையில் வளர்ச்சியடைந்து சரியான செயல்முறைப்போக்கையும் திசைவழியினையும் கொண்டிருந்தது. ஒரு சடங்காக அல்லாது நாம் இந்நாளை அனுஷ்டித்திட வேண்டும். கட்சியானது கடந்த காலங்களில் வழிநடத்திய அனைத்துப் போராட்டங்களிலிருந்தும் உலகம் முழுவதும் நடைபெற்ற பாட்டாளி வர்க்க இயக்கங்களிலிருந்தும் படிப்பினைகளை எடுத்துக்கொள்ள நாம் இந்நாளை அனுஷ்டிக்க வேண்டும். மேலும் நமது போராட்டத்தை புதுப்பித்துக்கொள்ளவும் பலப்படுத்திக் கொள்ளவும் புரட்சிகரப் போராட்டங்களைக் கட்டியெழுப்பிடவும் இந்நாளில் உறுதியேற்றிட வேண்டும். அதுவன்றி சுரண்டப்படும் மக்களின், உழைக்கும் வர்க்கத்தின் மற்றும் பிற உழைக்கும் மக்களின் விடுதலையை அடைந்திட முடியாது.

எனவே தாங்களும்கூட கம்யூனிஸ்டுகள்தான் என தங்களை அழைத்துக்கொள்ளும் பிற கட்சிகளான சிபிஐ, சிபிஐ (எம்), சிபிஐ (எம் எல்), ஆர்எஸ்பி ஆகிய கட்சிகளினின்று நமது கட்சியாகிய சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்) – எங்கு வேறுபட்டு நிற்கின்றதென்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். பின் இந்தியாவில் ஏன் நமது கட்சி மட்டுமே ஒரே உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியாக இருக்கின்றது. இந்த அடிப்படைக் கேள்வியினை நாம் புரிந்துகொண்டாக வேண்டும்.

தொடர்ச்சி 5ம் பக்கம்

# சக்திவாய்ந்தவர்கள், செல்வாக்கு மிக்கவர்களின் மத்தியில் பரவும் ஊழல் சமுதாயத்தையும் மக்களையும் நாசப்படுத்திவருகிறது

1ம் பக்கத் தொடர்ச்சி

கடுமையான பாதிப்பிற்கு ஆளாகின்றனர். ஈவிரக்கமற்ற அரக்கத்தனமான முதலாளித்துவ சுரண்டலால் ஏற்கனவே அவர்கள் கடுமையான பொருளாதார நெருக்கடிச் சக்கரத்தில் நசுக்கப்பட்டு வருகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக, பொதுக் கருவூலம் வேகமாக காலிசெய்யப்படுவதால் அல்லது பொதுக் கருவூலத்திற்கு வரவேண்டிய வருவாயில் இழப்பு ஏற்படுத்தப்படுவதால் ஏற்படும் உயர்மட்ட ஊழல்களினால் ஏற்கனவே வறுமைக்கு ஆளாகியுள்ளவர்களின் பணப்பையில் மேலும் ஓட்டை விழுந்துள்ளது. அடுத்தவர்களின் பாக்கெட்டை இப்படிக் கொள்ளையடிப்பதோடு ஊழலின் உக்கிரத்தால் மக்களின் அன்றாட வாழ்க்கை மிகப்பெரிய சீரழிவைச் சந்திக்கிறது.

'காவல்துறையினர் லஞ்சம் வாங்குகின்றனர்' என்பதை கிட்டத்தட்ட அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால், கேள்வி என்னவெனில் யார் வாங்கவில்லை? ஏன் ஒரு சிறிய வேலை ஆகவேண்டுமென்றால்கூட, அது அரசாங்கத் துறை, வரி வருவாய்த் துறை, நீதிமன்றம், என எங்கெங்கிலும் மக்கள் லஞ்சம் கொடுக்கவேண்டியுள்ளது அல்லது அநியாயமாக ஏராளமான பணம் செலுத்தவேண்டியுள்ளது. பணம் இல்லாமல் ஒரு பேப்பர் கூட நகராது. நியாயமான கடைகள் மூலமாக நிலையான விலையில் பொதுமக்களுக்கு வழங்கப்படவேண்டிய உணவுப் பொருட்கள் திறந்த சந்தையில் அநியாயமாக அதிக விலைக்கு விற்கப்படுகின்றன, நிர்வாகம் கைகட்டி வேடிக்கை பார்க்கிறது. காவல்துறை–நிர்வாகத்தின் கண்முன்பே கள்ளச் சந்தைக்காரர்களும் பதுக்கல்காரர்களும் செயற்கையான பற்றாக் குறையை ஏற்படுத்தி விலையை உயர்த்துகின்றனர். இதில் நிர்வாகம் நேரடியாக பங்கும் பகுதியுமாக இல்லாமல் இந்த முறைகேடுகள் நடைபெற வாய்ப்பே இல்லை.

அபாய நிலையிலிருக்கும் ஒரு நோயாளிக்கு அரசாங்க மருத்துவமனையில் படுக்கை பெற வேண்டுமானால் கூட அங்கே அதற்குரிய ஒரு புரோக்கரைப் பிடித்து அவன் கேட்கும் பணத்தைக் கொடுக்கவேண்டியுள்ளது. தங்களது குழந்தையை நல்ல பள்ளியிலோ அல்லது கல்லூரியிலோ சேர்க்க வேண்டுமானால் பெற்றோர்கள் ஏராளமான தொகையை நன்கொடையாக வழங்கவேண்டும். கவனிக்க வேண்டியவர்களிடம் பணம் கொடுத்தால் போதும் தரவரிசையில் இடம்பெறாத மாணவர்கள்கூட கொள்ளைப்புற வாசல்வழியாக சேர்ந்து விடலாம். இயற்கைப் பேரிடர் காலங்களில்கூட நிவாரணப் பொருட்களை வழங்குவதிலும் ஏராளமான ஊழல் நடைபெறுவது சர்வ சாதாரணமாகிவிட்டது. அத்தகைய நிவாரணப் பொருட்கள்கூட அபகரிக்கப்பட்டு வெளிச்சந்தையில் விற்கப்படுகிறது. தொழிலாளர்களிடமிருந்து பிடித்தம் செய்த பிஎஃப். தொகையை அதிகாரிகளின் உதவியோடு வணிகர்களும் பெரும் தொழிலதிபர்களும் கபளீகரம் செய்கின்றனர். ஏழை விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருட்களை கொள்முதல் நிலையங்களுக்கு விற்கச் செல்லும்போது அங்கே ஊழல்கறைபடிந்த நிர்வாகம்–போலீஸ்–பெரிய வியாபாரிகள்–குளிர்பதன கிடங்கு உரிமையாளர்கள்–ஆளும் கட்சித் தலைவர்கள் ஆகியோரின் கூட்டணி நிர்ப்பந்தத்திற்குப் பயந்து விரக்தியடைந்து குறைந்த விலைக்கு கொடுக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். தேர்தல்களில்கூட, வெற்றிபெறுவதற்காக ஓட்டுக்குப் பணம் கொடுப்பது உள்ளிட்ட அனைத்து முறைகேடுகளிலும் ஆளும் கட்சிகள் ஈடுபடுகின்றன. ஆக, ஊழலின் பிடியில் சிக்காத துறையே இல்லை என்ற நிலை உருவாகிவிட்டது. பலம்பொருந்திய அதிகாரம் படைத்தவர்கள் செய்யும் ஊழல் சமுதாயத் தையும் மக்களையும் துவம்சம் செய்துவருகிறது.

## ஊழல்வாதிகளும் முறைகேடுகளில் ஈடுபடுபவர்களும் தண்டனையிலிருந்து தப்பவிடப்படுகின்றனர்

சிறிய திருட்டில் ஈடுபடும் திருடர்கள் மிகக் கடுமையாக தண்டிக்கப்படும் அதே வேளையில் 'அதிகாரத்தில் இருப்பவர்கள், பலம்பொருந்தியவர்கள்' செய்யும் முடிவில்லா ஊழல்களைப்பற்றி விசாரிக்கும்போது சட்டம் தன் கண்களை மூடிக் கொள்வதைக் கண்டு மக்கள் கோபமும் விரக்தியும் அடைகின்றனர். பெரிய ஊழலில் அல்லது முறைகேடுகளில் சிக்கிய உயர்மட்டத்தில் உள்ள அதிகாரம் படைத்தவர்களுக்கு ஒரு சில வழக்குகளில், மக்களை ஏமாற்றுவதற்காக, தண்டனை வழங்கப்பட்டு ஒரு சில நாட்கள் அல்லது மாதங்கள் சிறைக்கு அனுப்பப்படுகின்றனர். ஆனாலும்கூட, அதிகாரத்தில் இருக்கும் அவர்களது 'தொடர்புகள்', 'ஆலோசகர்கள்', 'ஆபத்பாந்தவன்களின்' உதவியோடு அந்தத் தண்டனையைத் தற்காலிகமானதாக்கி உடனடியாக வெளியே வந்துவிடுகின்றனர். நாம் மேலே குறிப்பிட்ட சமீபத்திய ஒவ்வொரு மிகப்பெரிய ஊழல்களிலும் இது நடைபெற்றுள்ளதை நாம் காணலாம். லட்சக்கணக்கான கோடி ரூபாய் ஊழல் விஷயத்தில் அரசியல் நிர்வாகம், அமைச்சர்கள் மற்றும் ஆளும் கட்சி தலைவர்களின் பொறுப்பின்மையைக் கண்டு மக்கள் மிகுந்த வருத்தத்தில் உள்ளனர்.

மாறாக குற்றவாளிகளை மன்னிப்பதற்காக பல்வேறு சாக்குபோக்குகள் சொல்லப்படுகின்றன, ஏனெனில் ஊழல் மற்றும் சலுகைகளை அனுபவிப்பதில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உள்ளது. பூர்ஷ்வா அரசியல் அதிகாரத்தில் இருக்கும் எதிரெதிர் முகாம்கள் சம்பந்தப்பட்ட மெகா ஊழல்கள் வெளியே வரும்போது ஆரம்பத்தில் சற்று உணர்ச்சிகர வாதங்களும் போலியான சண்டைகளும் நடைபெறுகின்றன, ஆனால் புதிய சம்பவங்கள் நடைபெற்றவுடன் அப்பழைய சம்பவங்கள் காணாமல் போய்விடுகின்றன. இவ்வனைத்து ஊழல்களிலும் தலைமையேற்று நடத்தியவர்கள் பதவியிழப்பதோ அல்லது தண்டனைகள் பெறாமலே தப்பிப்பது மட்டுமல்லாது அவர்கள் மிகவும் ஆர்ப்பரிப்போடு உலாவுகின்றனர், அதோடு அவர்களுக்கு அமைச்சர் பதவிகளும், கொள்கை வகுக்கும் அமைப்புகளில் பதவிகளும், வேறு சில விரும்பத்தக்க உயர் பதவிகளும் பரிசுகளாக வழங்கப்பட்டு எந்த தண்டனையுமின்றி தப்பிக்க விடப்படுகின்றனர். அனைத்து மெகா ஊழல்களும் முந்தைய அரசாங்கத்தில்தான் நடைபெற்றது என்று மக்களை நம்பவைக்க பாஜக பிரதமர் நரேந்திரமோடி முயற்சிக்கிறார்.

ஆனால் அவரது ஆட்சியில் இதுபோன்று நடைபெறவில்லையா? ஏகபோகவாதியான கௌதம் அதானி குழுமம் பிரதமர் நரேந்திரமோடியின் அனுகூலத்தை அவ்வப்போது பெற்றதாக சொல்லப்படுகிறது. அவர் பொதுத்துறை வங்கிகளிடமிருந்து ரூ72,000 கோடி கடன் பெற்றார் என சில நாட்களுக்கு முன்பு செய்தி வெளியானது. இத்தொகை நாட்டின் ஒட்டுமொத்த விவசாய பயிர் கடன்களுக்கு இணையானதாகும். அவரது தனிப்பட்ட சொத்து 80–85% அதிகரித்து ரூ81 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. இதன்மூலம் அவர் தற்போது உலகின் 7வது பணக்கார இந்தியராக உருவெடுத்துள்ளார் (India Samvad and The Hindu-06-05-16) அதேபோல் வங்கிகளிடமிருந்து வாங்கிய ரூ9,000 கோடி கடனை திரும்பச் செலுத்தாமல் வெளிநாட்டிற்கு தப்பி, கிட்டத்தட்ட உல்லாசப் பயணமாகச் சென்றுள்ள தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட தொழிலதிபர் விஜய் மல்லையாவை இந்தியாவிற்கு திரும்பக் கொண்டுவருவதற்காக எந்தவொரு உருப்படியான நடவடிக்கையையும் நரேந்திரமோடி அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. இதை 2ஜி மற்றும் நிலக்கரிச் சுரங்க முறைகேட்டைப்போலவே நிர்வாக உதவியுடன் நடைபெற்ற ஊழல் வழக்காக ஏன் கருதக்கூடாதா? இதுபோன்ற உதாரணங்கள் முதலாளித்துவ இந்தியாவில் ஏராளம். அரசாங்கம் அல்லது தொழிலின் ஒவ்வொரு களத்திலும் ஊழலை வளர்ப்பவர்கள் ஈடுபடுபவர்கள் உயர் பதவிகளிலிருந்து அடிமட்டம் வரை ஒருவரோடு இணைந்தே செயல்படுபவர்கள் தண்டிக்கப்படாமல் விடப்படுவதோடு, ஊட்டி வளர்க்கப்படுகின்றனர்.

## சமூக–கலாச்சாரத் துறையையும் ஊழல் பாழ்படுத்திவருகிறது

எனவே, இந்த ஊழல் திருவிழாக்களைப் பார்க்கும் அரசியல் விழிப்புணர்வு இல்லாத சாமானிய மக்கள் எங்கும் வியாபித்திருக்கும் ஊழல் என்பது தலைவிதி, எனவே அதற்கு தீர்வு இல்லை என்று நினைத்துவிடுகின்றனர். நமக்கும் ஏதாவது அதிர்ஷ்டம் வந்துவிடாதா, ஊழல் வழியில் விரைந்து ஆதாயம் பெற்றுவிடலாம் என்று நினைக்குமளவு சூழல் மிகவும் வேதனைக்குரியதாகிவிட்டது. மனசாட்சிக்கு இதில் வேலையில்லாமல் போய்விட்டது. நீங்கள் ஏன் சட்டவிரோதமாக வேறுவழியில் கூடுதலாக சம்பாதிக்கக் கூடாது? அது நமது குடும்பத்தின் பணச் சுமையைக் குறைக்குமே என்று ஒரு தந்தையிடம் மகன் கேட்கிறார். தனது மகளின் திருமணத்தை முடிவு செய்யும்போது, வரவிருக்கும் மருமகன் அவரது சம்பளத்தைத் தவிர வேறு ஏதெனும் மேற்படி வருமானம் உள்ளவராக இருக்கிறாரா என்று அப்பெண்ணின் தந்தை கணக்குப் பார்க்கிறார். வரதட்சணை வழங்கும் அமைப்பே ஒருவகையில் பார்த்தால், சமூக அனுமதியோடு நடைபெறும் ஊழலே ஆகும். தேர்தல் நேரத்தில், எந்தக் கட்சிகள் தங்களுக்கு எவ்வளவு வழங்குவார்கள் என்று வறுமையில் வாடும் மக்கள் கணக்கு பார்க்கின்றனர், அக்கட்சிகள் எவ்வளவு ஊழல்வாதிகளாக இருந்தாலும் அதுபற்றிக் கவலைப்படுவதில்லை. இப்படித்தான் வாழ்க்கையின் ஒவ்வொரு படிநிலையிலும் ஊழல் புரையோடியிருக்கிறது, அது சமூக அரசியல் களத்தின் மீது தனது ஆக்டோபஸ் போன்ற கரத்தால் கவ்வியிருப்பதோடு, சமூக–கலாச்சாரக் களத்தையும் பாழ்படுத்திவருகிறது.

## அனைத்து முதலாளித்துவ–ஏகாதிபத்திய நாடுகளும் ஊழலில் மூழ்கியுள்ளன

ஊழல் என்பது இந்தியாவை மட்டுமல்லாது, ஒட்டுமொத்த ஏகாதிபத்திய–முதலாளித்துவ உலகையும் உலுக்கிவருகிறது. பேராசையாலோ அல்லது கெட்ட எண்ணத்தாலோ அங்கொன்றும் இங்கொன்றுமாக தனிநபர்கள் ஊழலில் ஈடுபட்டாலும் கூட தண்டிக்கப்படாமல் அதை விட்டுவிடக் கூடாது. ஆனால் அனைத்து ஏகாதிபத்திய–முதலாளித்துவ நாடுகளையும், சிறிதோ அல்லது பெரிதோ, ஊழல் மண்டியிருப்பதையே நாம் காண்கிறோம். ஊழல்வாதிகள் என்று எப்போதும் மற்றவர்களை விரல்நீட்டும், உலக ஏகாதிபத்தியத்தின் தலைவனான, அமெரிக்காவில் சமீப காலங்களில் என்ரான், பெர்னார்டு மெடாஃப், லெஹ்மன் பிரதர்ஸ் போன்ற மெகா நிதி முறைகேடுகள் நடைபெற்றுள்ளன. சப் பிரைம் (வீடுகட்டுவதற்கான வங்கிக்கடன் நெருக்கடி) நெருக்கடி பெரும்பாலும் அமெரிக்காவைச் சேர்ந்த சூதாட்டக்கார கும்பல் ஒட்டுமொத்த நிதி அமைப்பையும், பெரிய வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள்கூட திவாலாகும் வண்ணம் எப்படி பாதிக்கச் செய்தன என்பதை காட்டியது. ஆனால் பில்லியன் டாலர்களை விழுங்கிய அந்த முறைகேட்டில் ஈடுபட்டவர்களில் ஒருவர்கூட கைது செய்யப்படவில்லை. மாறாக, அரசாங்க கருவூலத்திலிருந்து (அதாவது மக்கள் பணத்திலிருந்து) அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது, ஊழல்வாதிகள், நிதிநிறுவன அதிகாரிகளின் பெயர் பட்டியல் பொதுத் தளங்களில்கூட காணப்படுகிறது.

ஒலிம்பஸ் மற்றும் டெஸ்கோ போன்ற நிதி முறைகேடுகளை ஐரோப்பா கண்ணுற்றது. நிக் லெஸ்ஸான் தலைமையிலான பேரிங்ஸ் வங்கி முறைகேடு ஒட்டுமொத்த தென் கிழக்கு ஆசியாவின் அடித்தளத்தையே ஆடச் செய்தது. உலக அளவில் கால்பந்தாட்டத்தை கவனிக்கக்கூடிய சர்வதேச கால்பந்து அமைப்பில் ஊழல், ஐபிஎல் மற்றும் சர்வதேச கிரிக்கெட்டில் நடைபெற்ற மேச் பிக்சிங் ஊழல் ஆகியவை முதலாளித்துவத்தில் விளையாட்டுக் களமும் கூட எந்த அளவு அசிங்கமாகியுள்ளது என்பதைக் காட்டுகிறது. எதிர்ப்புரட்சி நடைபெற்று சீனாவில் முதலாளித்துவம் வந்துவிட்டபிறகு அந்நாடு ஊழலின் கூடாரமாகிவிட்டதாக குற்றம் சாட்டப்படுகிறது. ஜப்பானில், அமைச்சர்களின் வானளாவிய ஊழல்களால் அரசாங்கங்கள் வீழ்கின்றன. இஸ்ரேல் பிரதமரின் மனைவி பொது நிதியை சொந்த லாபத்திற்காகப் பயன்படுத்தியதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. சமீபத்தில் வெளியான பனாமா பேப்பர் ஊழல் கிட்டத்தட்ட அனைத்து இடங்களிலும், பணக்காரர்கள் மற்றும் ஆளும் வர்க்கம்: தற்போதைய மற்றும் முந்தைய அரசாங்கத்தின் தலைவர்கள்; தொழில் முதலைகள்; புகழ் பெற்றவர்கள் என அனைவருமே ஈடுபட்டிருப்பதை எடுத்துக்காட்டியுள்ளது. மக்களை விலை கொடுத்து அதிகாரத்தின் உச்சியில் இருப்பவர்கள் அனைவருமே ஆர்ப்பரிப்போடு தங்களது பங்கை முறைகேடாகப் பெறுகின்றனர் என்பதிலிருந்து இன்று முதலாளித்துவத்தில் ஊழல் நிறுவனமயமாக்கப்பட்டுவிட்டது என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

## தற்போதிருக்கும் சமூக–அரசியல் அமைப்போடு ஊழல் கொண்டிருக்கும் வெளிப்படையான தொடர்பு

தங்களது பணபலத்தைக் கொண்டு தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளும் வசதிபடைத்த

தொடர்ச்சி 3ம் பக்கம்

# முதலாளித்துவத்தில் ஊழல் இன்று நிறுவனமயமாக்கப்பட்டுவிட்டது

2ம் பக்கத் தொடர்ச்சி

நயவஞ்சகர்கள், நயவஞ்சக அமைச்சர்கள்– அரசியல்வாதிகள்– உயரதிகாரிகள் மற்றும் சில தொழில திபர்கள் செய்யும் வேலைகள்தான் ஊழல் என்ற கருத்து நிலவுகிறது. எனவே சரியான சட்டத்தை இயற்றி அதிகாரம் மற்றும் செல்வாக்கிலிருந்து இந்த சக்திகளை நீக்கிவிட்டால் ஊழல் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்ற கருத்தும் நிலவுகிறது. ஆனால் பிரச்சினை அவ்வளவு எளிதானதா? அப்படி இருந்தால், அரசாங்க உயரதிகாரிகள் மாறிய பிறகும் அல்லது அரசாங்க உயரதிகாரிகள் மாற்றப்பட்டு அல்லது புதிதாகச் சேர்க்கப்பட்ட பிறகும், ஊழல் குறைந்த பாடில்லை? ஊழல்வாதிகளுக்குத் தண்டனை கிடைக்கவில்லை? இதை வேறொரு கோணத்தில் பார்ப்போம்.

வறுமையிலுள்ளவர்கள் பிக்பாக்கெட் அடிப்பது, சிறிய திருட்டில் ஈடுபடுவது, வறுமையாலும் வாழ் வாதாரத்திற்கு ஏதுமில்லாமலும் உயிர்வாழ்வதற்காக ஏதாவது வீட்டில் புகுந்து சிறிய கொள்ளையில் ஈடுபடுவது, இவையும் ஊழல்தான். ஆனால் இந்த சிறிய திருட்டுகள், கொள்ளைகள் இந்த அமைப்பில் தண்டிக்கப்படாமல் தப்புவதில்லை. ஆனால், வசதியும் அதிகாரமும் படைத்தவர்கள் மெகா முறை கேடுகள் அல்லது ஊழல்களில் ஈடுபடும்போது, ஆள்பலமும் அதிகாரபலமும் கொண்டவர்கள் முறைகேடாக சட்டத்தை வளைத்து, மீறி, மிரட்டி, ஏமாற்றி, அரசாங்கம் மற்றும் நிர்வாகத்தின் துணையோடு மற்றவர்களை ஏமாற்றி மிகப்பெரிய அளவில் சொத்துக்களைக் குவிக்கும்போது அதே தண்டனை அமைப்பு செயல்படுவதில்லை. எனவே முதலாளித்துவ அமைப்பே இந்த ஊழலை உருவாக்காவிட்டால், எதற்காக அதை ஊக்கப்படுத்துகிறது அல்லது வேடிக்கை பார்க்கிறது? அரசாங்கங்கள் ஊழல் பரவுவதற்கும் கட்டுப்பாடின்றியும் இருக்க அனுமதிப்பதோடு மட்டுமல்லாமல் அரசாங்கமே ஊழலில் மூழ்கிக் கிடப்பது ஏன்? அமைப்பே ஊழல்மலிந்ததாக இல்லாமல் இது நடக்க முடியுமா?

ஆட்சியாளர்கள் மற்றும் உயரதிகாரிகளின் சட்ட விரோதமான தவறான நடவடிக்கைகள் மூலமாக பொதுநிதி சூறையாடப்படுவது, மெகா குற்றங்கள், கொள்ளை உள்ளிட்ட ஊழல்கள் பல்கிப் பெருகிவருவதைக் கண்டு ஆழ்ந்த கவலையில் இருக்கும் சிந்திக்கும் மக்கள் குறிப்பாக படித்த அறிவுஜீவிகள் இந்தக் கேள்வியை சிரத்தையுடன் கவனிக்க வேண்டும். அவர்களது சமூகப் பொறுப்புணர்வை வெளிப்படுத்தும் விதமாக, இந்தப் பிரச்சினை குறித்த கருத்தாக்கத் தெளிவை கைவரப்பெற வேண்டும், அப்போதுதான் எங்கும் வியாபித்திருக்கும் ஊழலுக்கு உண்மையான காரணம் என்ன? தீர்வுக்கான பாதை என்ன? இந்தத் தீமையின் ஆணிவேரை எப்படி அறுத்தெறிய முடியும் என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியும்.

### ஊழலின் சமூக–அரசியல் ஆணிவேர்

ஊழலுக்கான ஆணிவேரைக் கண்டறிவதற்கு விஞ்ஞானபூர்வ பகுத்தாய்வு முறையின் அடிப்படையில் உண்மையைத் தேடும்போது நாம் ஒன்றை நினைவிற்கொள்ள வேண்டும், ஒரு குறிப்பிட்ட காரணமும், ஒரு குறிப்பிட்ட நோக்கமும் இன்றி எந்த ஒரு நிகழ்வும் இயற்கையிலோ அல்லது சமுதாயத்திலோ நடைபெறாது என்பதை மனதில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு சம்பவமும், ஒவ்வொரு நிகழ்வும் அல்லது பிறழ்ச்சிக்கும் பின்னணியில் ஒரு காரணத்தினடிப்படையிலான தொடர்பு செயல்படுகிறது. அதன் இப்போது ஆணிவேர் இருக்கக்கூடிய சமூக–அரசியல்–பொருளாதார அமைப்பில் இருக்கிறது. ஒரு சமூக–அரசியல் அமைப்பு, ஒரு சித்தாந்தம், ஒரு அறநெறிக் கோட்பாடு என்பது சமூக முன்னேற்றத்திற்கு உகந்ததாகவும், நாகரீக வளர்ச்சிக்காகப் போராடக்கூடியதாகவும் இருக்கும்வரையில் அது உயர்ந்த கலாச்சாரத்தையும் அறநெறியையும் உருவாக்குகிறது. ஆனால், சமூக வளர்ச்சியில் இரங்கா செயல்முறைப் போக்கைத் தொடர்ந்து அதே அமைப்பு அல்லது சித்தாந்தம் வழக்கொழிந்து போகிறது. அதனால் அது பிற்போக்காகிறது, சமூக முன்னேற்றத்தைத் தடைசெய்கிறது. நாகரீக வளர்ச்சியைத் தடுக்கிறது, அறநெறி, ஒழுக்கநெறி சீரழிவை உருவாக்குகிறது ஊழலையும் ஊட்டுகிறது. வேறு வார்த்தைகளில் கூறினால், வாழ்க்கையின் எல்லா மட்டங்களிலும் சீரழிவை உருக்கொள்ளும் அளவிற்கு அமைப்பே அழுகிப்போனால் மட்டும்தான் இத்தகைய எல்லாம் தழுவிய ஊழல் நடைபெறமுடியும்.

ஒருவர் விஞ்ஞானபூர்வ முறையியல் ஆய்வு மற்றும் உண்மைகளின் பட்டறையில் உரசிப்பார்த்து வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால், முதலாளித்துவம் வளர்ந்த ஆரம்ப நாட்களில், காலாவதியாகி பிற்போக்காகியிருந்த மன்னராட்சி அமைப்பை மாற்றி புதிய கருத்தாக்கத்தோடு புதிய ஜனநாயக அமைப்பை நிறுவ வேண்டும் என்று கோரியவர்கள் புதிதாக உருவெடுத்த பூர்ஷ்வா ஜனநாயக மனநிலை உத்வேகத்தால் வழிநடத்தப் பட்டனர். எனவே, பூர்ஷ்வா ஜனநாயகத்தை முன்னிறுத்தி வாதாடியவர்கள் பூர்ஷ்வா விழுமியங்களை, நியதிகளை, அறநெறிகள் மற்றும் தார்மீக நெறிகளை அறிமுகப்படுத்தினர். அவை அப்போதிருந்த சமூக–பொருளாதார சூழலில் முற்போக்கானதாகவும் சமூக முன்னேற்றத்திற்கு உகந்ததாகவும் இருந்தது. அந்த விழுமியங்களும் நியதிகளும் அன்றைய சமூக முன்னேற்றத் தேவைக்கு இசைவாக இருந்ததால், அவர்கள் ஒட்டுமொத்த சமுதாயத்தையும் கலக்கினர். மக்களிடையே புதிய விழிப்புணர்வு எழுச்சியை ஊட்டினர். ஜனநாயகச் சிந்தனைகளை முன்னிறுத்தி வாதாடியவர்கள், மறுமலர்ச்சியின் சிற்பிகள், வழக்கொழிந்த நிலப்பிரபுத்துவ அமைப்பின் அசிங்கமான கேவலமான இழிவுகளிலிருந்து விடுபட்ட புதுமனிதர்களாக விளங்கினர். ஆனால், இன்று, வரலாற்று விதியின் செயல்முறைப்போக்கைப் பின்பற்றி, முதலாளித்துவம், மனிதனை மனிதன் சுரண்டுவதை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், அதன் அக முரண்பாடு மற்றும் பலகீனத்தின் காரணமாக, அதன் கிழடுதட்டிப்போன அழுகல் கட்டத்தை அடைந்து, மிகவும் பிற்போக்குத்தனமாக மாறி, சமூக முன்னேற்றத்திற்குத் தடையாகிவிட்டது. மரிக்கும் முதலாளித்துவம் பிற்போக்குத்தனமாகி விட்டதால், இன்று அது எவ்வித உயர்ந்த சித்தாந்தத்தையும் ஊட்டி வளர்க்காது. மாறாக, அழுகிப்போன நிலையிலிருக்கும் முதலாளித்துவம் தனது வாழ்வை நீட்டிக்க விரும்புவதால் அது அனைத்து உன்னதமான கருத்துக்கள், தார்மீக ஒழுக்கநெறிகள், விழுமியங்கள், மென்மையான உணர்வுகள் மற்றும் இதர மனிதநேய குணாம்சங்களைக் கொல்கிறது. அதோடு மட்டுமல்லாது முதலாளித்துவம் உருவெடுத்த வேளையில் அது போதித்த அனைத்து சட்ட மற்றும் ஒழுங்கு முறைகளையும், அனைத்து நியதிகள் மற்றும் நடைமுறைகளையும் திட்டமிட்டு தகர்ப்பதோடு, அது போதித்த உயர்ந்த கருத்துக்களை காலிலிட்டு மிதிக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஆளும் முதலாளித்துவம் தனது அடக்குமுறை, கொடிய ஆட்சிக்கு எதிராகப் போராடும் உத்வேகத்தை அளிக்கக்கூடிய ஜனநாயக விழுமியங்களையும், அறநெறிகளையும் ஒழுக்கநெறிகளையும் கொஞ்சம் பயிற்றுவித்தாலும் அது மக்களிடையே உயர்ந்த சிந்தனைகளை மலரச் செய்து தற்போதைய தேய்ந்துபோன அமைப்பின் இருத்தலுக்கே மிகப்பெரிய ஆபத்தாகிவிடும் என்ற அச்சத்தின் காரணமாக ஆளும் முதலாளித்துவம் அது ஒருகாலத்தில் உயர்த்திப்பிடித்த அதே ஜனநாயகக் கோட்பாடுகளையும் விழுமியங்கள் அமைப்பையும் மீறிவருகிறது. இந்த அமைப்பில் எப்போதும் இருக்கக்கூடிய தீர்க்க இயலாத சந்தை நெருக்கடியில் உக்கிரமாக முதலாளித்துவம் மூழ்கும்போது அனைத்து நடத்தை நெறிகள் மற்றும் விழுமியங்கள், அனைத்து ஒழுக்கநெறிகள், அறநெறிகள் மற்றும் கோட்பாடுகளையும் அழிக்கும் போக்கு மேலும் தீவிரமடைகிறது. இன்றைய அமைப்பே தவறிழைத்தல் மனித சாராம்சத்தையும் மனித தரத்தையும் அழித்தலை முகவுரையாகக் கொண்டு செயல்படுவதால் ஜனநாயக விழுமியங்களையும் கோட்பாடுகளையும் இப்படிக் கண்மூடித்தனமாக அழிப்பதானது எந்தக் கவலையுமின்றி எந்தத் தவறையும் செய்யலாம் என்ற அனுமதியை வழங்குகிறது. எனவே மரணப்படுக்கையில் இழுத்துக் கொண்டிருக்கும் முதலாளித்துவம் எல்லாக் களங்களிலும் ஊழலில் மூழ்கியுள்ளது. எனவே மரித்து மூழ்கிவரும் முதலாளித்துவ அமைப்போடு அல்லது அதன் சீரிய அடிவருடிகளோடு சேர்ந்து செயல்படும் ஒருவர் ஊழலிலிருந்து விலகிஇருக்க முடியாது.

### நிதிக்குற்றங்களும் ஊழலும்

முதலாளித்துவம் இன்று அப்பட்டமாக பிற்போக்குத்தனமானதாகவும் ஊழல்மிகுந்ததாகவும் ஆகிவிட்டபடியால், பேராசை, அதிகாரம் மற்றும் பணத்திற்கான வெறிபிடித்த போதை, என்ன விலை கொடுத்தாவது தன்னை வளப்படுத்திக்கொள்வது போன்றவை உயர்மட்டம் முதல் கீழ்மட்டம் வரை எங்கும் வியாபித்துவருகிறது. செல்வத்தை நோக்கி ஓடும் பைத்தியமாக ஒவ்வொருவரையும் முதலாளித்துவம் இன்று ஆக்குகிறது. செல்வத்தை சேகரிக்க இப்படி ஓடுவது எப்படியாவது பணத்தை கைப்பற்றுவதே வாழ்க்கையின் லட்சியம் என்ற சிந்தனையை வளர்க்கிறது. பணத்தைத் தேடி ஓடுவதைத் தவிர மற்ற எல்லாமே இரண்டாம் பட்சமாகிவிட்டது.

இத்தகைய சிந்தனை வானத்திலிருந்து வந்துவிடவில்லை, மாறாக இங்கிருக்கும் அழுகிப்போன முதலாளித்துவ சமூக–பொருளாதார அமைப்பிலிருந்துதான் பிறந்துள்ளது. அழுகிப்போன முதலாளித்துவத்தில் நிதிச் செயல்பாட்டுக் களம் முழுமையும் சூதாட்டக்காரர்களின் குகையாக மாறப்பட்டுவிட்டதால், அங்கு மற்றவர்களை எப்படியாவது ஏமாற்றியாவது முறைகேடுகளில் ஈடுபட்டாவது ஒருவரது பையை பிடுங்கும் அளவிற்கு பணத்தால் நிரப்பவேண்டும் என்பதே ஒரே நோக்கமாகிவிட்டது என்பதை நாம் இதற்கு முன்பு பல தருணங்களில் சுட்டிக்காட்டியுள்ளோம். ஏமாற்றுவதில், முறைகேட்டில் ஈடுபடுவதில், அதிக பணம் சேர்ப்பதில் ஏராளமான அநியாய சலுகைகள் பெறுவதில் யார் சிறந்தவர், பகாசுர கார்ப்பொரேட்டுகள், ஏகபோக குழுமங்கள் மற்றும் அவர்களது அடிவருடி அரசியல்வாதிகள்–அமைச்சர்கள்–உயர் அதிகாரிகள்– சட்டமியற்றுவோரிடையே கடுமையான போட்டி 24 மணிநேரமும் நடைபெற்றுவருகிறது. சட்டங்களை வளைத்தல், நெறிமுறைகளை மீறுதல், அறநெறி பிறழ்ந்த நடவடிக்கைகள், குறுக்குவழியில் ஏராளமான சொத்துக்களைக் குவித்தல் போன்ற வற்றை அவர்கள் களிப்போடு செய்துவருகின்றனர். கையூட்டு, லஞ்சம், லாவண்யம் போன்றவை யெல்லாம் 'உதவி கட்டணம்', 'கட்டிட வளர்ச்சி நிதி' என்பன போன்ற புதிய வார்த்தைகளைப் பயன்படுத்தி சுயநலத்திற்காக பணத்தை பெறும் சட்டவிரோத நடவடிக்கைகள் நியாயப்படுத்தப்படும் அளவிற்கு நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது. ஊழல் என்பது ஒட்டுமொத்த முதலாளித்துவ அமைப்பின் ஆதாரமாகிவிட்டதை இவை மேலும் உறுதிப்படுத்துகின்றன. இன்று ஊழலே ஒட்டுமொத்த முதலாளித்துவ அமைப்பின் பிரதான அம்சமாக ஆகிவிட்டது.

### முதலாளித்துவத்தில் பணம்தான் எல்லாவற்றிலும் ஆதிக்கம் செலுத்தும் என்ற மார்க்சின் முன்கூட்டிய கணிப்பு

அடிப்படை மனிதநேய விழுமியங்கள் மற்றும் பூர்ஷ்வா ஜனநாயகக் கோட்பாடுகளைப் பின்பற்றுவதை முழுமையாகக் கைவிடாத 19ஆம் நூற்றாண்டின் மத்தியிலேயே, சமூக வளர்ச்சி குறித்து விஞ்ஞானபூர்வ பகுத்தாய்வு அடிப்படையில் ஆய்வு செய்த கார்ல் மார்க்ஸ் அவர்கள் பணம்தான் அதிகாரம் படைத்தது, சகலமும் என்று கூறினார் என்பதை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். வாழ்க்கையின் அனைத்தும் ஏன் சமூக உறவுகள்கூட பணத்திற்கு இரண்டாம் பட்சமாகி விட்டது. இதை மார்க்ஸ் மேலும் விளக்கியுரைக் கையில், முதலாளித்துவத்தில் பணம் என்பது ஒருவரிடமிருந்து மற்றொருவர் வாங்குதல் மற்றும் விற்பதற்குப் பயன்படுத்தப்படும் வெறுமனே பரிமாற்றத்திற்கான ஊடகமாக மட்டும் இருக்கவில்லை என்று சுட்டிக்காட்டுகிறார். பணம் என்பது காலத்திற்கும் தனது மதிப்பை வைத்திருக்கிறது. யாருடைய மதிப்பை அது தாங்கியிருக்கிறது? ஒரு குறிப்பிட்ட சரக்கின் மதிப்பை அது தாங்கியிருக்கிறது. சரக்கு என்பது முதலில் சில மனிதர்களின் தேவையை, கோரலை பூர்த்திசெய்கிறது. இரண்டாவதாக நுகர்வதற்காக அல்லாமல் பரிமாற்றத்திற்காக உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்தி செயல்முறைப்போக்கின் மூலம் தொழிலாளியின் உழைப்பால் சரக்கின் மதிப்பு உருவாக்கப்படுகிறது, ஆனால் பரிமாற்றம் நடக்கும் செயல்முறைப்போக்கில் மற்ற சரக்கோடு ஒப்பிடப் படுவதன்மூலமாகத்தான் அதன் மதிப்பு வெளிப் படும். வேறு வார்த்தையில் கூறினால், சரக்கில் பொதிந்துள்ள சரக்கு உற்பத்தியாளரின் சமூக உழைப்பே மதிப்பு என்பதாகும். முதலாளித்துவ அமைப்பில் உழைப்பு மற்றும் மூலதனம் என்பதே உற்பத்தி உறவுகளின் அடிப்படையாகும். ஊதியம் பெறும் ஊழியர்கள் அல்லது உழைப்பு சக்தியை சுரண்டுவதற்கு உற்பத்தி சாதனங்களின் மீதான முதலாளித்துவ உரிமை பயன்படுத்தப்படுகிறது. உழைப்பாளிக்கு அவரது உற்பத்தி சக்தியில் அல்லது அவர் உற்பத்தி செய்த சரக்கு மதிப்பின் ஒரு சிறிய பகுதிதான் ஊதியமாக முதலாளித்துவ உரிமையாளரால் வழங்கப்படுகிறது. தொழிலாளியின் உழைப்பு சக்திக்கு ஏற்றவாறு கொடுக்கப்படாத ஊதியம் உபரி மதிப்பாக உரிமையாளரால் லாபமாக கபளீகரம் செய்யப்படுகிறது. எனவே முதலாளித்துவத்தில் பணம் என்பது பரிமாற்றத்திற்கான ஊடகமாக மட்டும் இருக்கவில்லை. உபரி உழைப்பு

தொடர்ச்சி 4ம் பக்கம்

# ஜனநாயக மக்கள் இயக்கத்தின் நிர்ப்பந்தத்தால் மட்டுமே இன்று வளர்ந்துவரும் ஊழலை தடுக்கமுடியும்

3ம் பக்கத் தொடர்ச்சி

சக்தியை லாபமாக அபகரிப்பதன்மூலமாக மற்றவர்களின் உழைப்பு சக்தியை சுரண்டுவதற்கு பயன்படுத்தப்படும்போது பணம் என்பது மூலதனமாகிறது. மூலதனம் என்பது முதலாளியால் முன்வைக்கப்பட்டு, சுற்றுக்கு விடப்பட்டு, பின்னர் அதிகரிக்கப்பட்டதாக அவரிடமே வருகிறது.

முதலாளித்துவ அமைப்பிற்குள்ளேயே சுரண்டல் ஆணிவேராக உள்ளது என்பதை எடுத்துக்காட்டுவதற்காக முதலாளித்துவ உற்பத்தியின் அடிப்படைகளை சுருக்கமாக இங்கே கூறினோம். ஏற்கனவே உழைப்பாளர்கள் முதலாளித்துவ உற்பத்தியின் விதியின்படி தங்களுக்குரிய பங்கை இழக்கின்றனர். அவர்களது இழப்பு தொடர்ந்து அதிகரித்ததன் விளைவு லாபம் அதிகரித்தல் மற்றும் மூலதனப் பெருகுதலாக அல்லது பொதுவாகச் சொன்னால் முதலாளித்துவ உரிமையாளர்களின் செல்வம் அதிகரிப்பதென்ற வடிவில் வெளிப்படுகிறது. இதோடு சேர்ந்து, விலைவாசி உயர்வு மற்றும் ஊழல் வடிவத்தில் தாங்கள் சிறுகச் சேர்த்தவற்றையும் பிடுங்க உழைக்கும் மக்கள் கசக்கப்படுகின்றனர். செயற்கையாகவும் முறையில்லாமல் திடீரெனவும் அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசியை உயர்த்துவதன் மூலமாக அல்லது பொதுப்பணத்தை நேரடியாகக் கொள்ளையடிப்பதன் மூலமாக ஊழல் மூலமாக யாருடைய பணம் வஞ்சிக்கப்படுகிறது? கையூட்டு அல்லது லஞ்சம் அல்லது கமிஷன் போன்றவை கையகப்படுத்துவதற்கான விலையை அதிகரிப்பதோடு பொதுப் பணத்திற்கு இழப்பை ஏற்படுத்துகின்றன. வரி விலக்கும் உரிய பங்கை வருவதைத் தடுப்பதால் அதுவும் பொதுநிதியில் இழப்பை ஏற்படுத்துகின்றன. 2ஜி அலைக்கற்றை ஊழலை எடுத்துக்கொண்டால், அங்கே விலைக்கு வாங்கியவர்கள் லஞ்சம் செலுத்திவிட்டு குறைந்த விலைக்கு வாங்க அனுமதிக்கப்பட்டனர். இந்த வகையிலும்கூட பொது நிதியில் முறைகேடு செய்யப்படுகிறது. மிகப்பெரிய தொழிலதிபர்கள் ஏராளமான தொகையை வங்கிகளில் கடனாகப் பெற்றுக் கொண்டு திருப்பிச் செலுத்தாமல் உள்ளனர். மக்கள் கடுமையாக உழைத்து சேமித்து வைத்துள்ள பணமே வங்கிகளிலுள்ள பணத்தின் பிரதான பங்காகும். ஆக தற்காப்புக்காக அவர்கள் என்ன காரணங்களைக் கூறினாலும் மறைமுகமாக பொதுமக்களின் நிதி இருப்பைத்தான் அவர்கள் களவாடுகின்றனர். வங்கிகளில் சேமித்துவைக்கும் சாமானியர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டும், வட்டி வீதம் தொடர்ச்சியாகக் குறைக்கப்படுவதால் இழப்பையும் சந்திக்கும் அதே வேளையில், பகாசுர தொழில் நிறுவனங்கள் வங்கிகளில் பெற்ற கடன்களைக் கொண்டு சொத்துக்களைக் குவித்தபோதிலும் வாங்கிய கடனைக் கொடுக்காமல் ஏமாற்றிவரும் தொகை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. உழைக்கும் வர்க்கத்தின் உபரி உழைப்பைக் கபளீகரம் செய்வதன் மூலம் கிடைக்கும் மூலதனத்தைக் குவித்து முதலீடு செய்து தங்களது லாபத்தை உச்சபட்சமாக்கி செல்வத்தை பல்கி பெருகச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலமாக முதலாளித்துவவாதிகள் 'பணம் சம்பாதிப்பது தான் வாழ்க்கையின் ஒரே லட்சியம்' என்ற எண்ணத்தை சமுதாயத்தில் விதைக்கின்றனர். லாப விதியின் அடிப்படையிலும் சிலருக்கு மட்டுமே செல்வம் என்ற அடிப்படையிலும் அதே நேரத்தில் லட்சக் கணக்கான உழைக்கும் மக்களைச் சுரண்டி– அடக்கி–வறுமைக்குள்ளாக்கி– இழப்புக்குள்ளக்கி– தரித்திரத்திற்குள் தள்ளும் இன்றைய முதலாளித்துவ சமூக–பொருளாதார அமைப்புதான் ஊழலின் தோற்றுவாய்க் களம் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

### சோசலிசத்தில் ஊழல் இல்லை

முதலாளித்துவம்தான் அனைத்து தீமைகளுக்கும் ஆதாரமாக விளங்குகின்றது என்பதை மற்றொரு உண்மையிலிருந்து சரிபார்க்கலாம். கிழடுதட்டிப் போன முதலாளித்துவத்திலிருந்து வர்க்கமற்ற சுரண்டலில்லாத கம்யூனிச சமுதாயத்திற்கு மாறும் போக்கில் இடைக்கால கட்டமாக சோசலிசம் சோவியத் யூனியன், சீனா, பின் வியட்நாம் ஆகிய நாடுகளில் ஸ்தாபிக்கப்பட்டது. அப்போது அங்கே அடிப்படை கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டபோதிலும், உயர் கட்டுமானத்தில் அல்லது மனங்களில் தானாகவே உடனடியாக மாற்றம் ஏற்படவில்லை. ஆனாலும் கூட அங்கே ஊழல் அதன் இயற்கையான மரணப் படுக்கைக்கு சென்றது. மாறிய பொருளாதார– சமூக –அரசியல் அமைப்பு வாழ்க்கைக்குத் தேவையான பொருள் இருப்பையும் கலாச்சாரத் தேவைகளையும் முழுமையாக உத்திரவாதப்படுத்தியதோடு சோசலிசத்தை முன்னேற்றத் தேவையான கலாச்சார சூழ்நிலைமைகளையும் உருவாக்கியதால் அது தனிப்பட்ட ஆதாயங்களைப் பெறுவதற்காக தவறுகளைச் செய்யும் மனப்பான்மையை முற்றிலும் அழித்தது. அந்த நாடுகள் சோசலிச வளர்ச்சிக்கான விதிகளை மிகவும் விழிப்போடு பின்பற்றியவரை அதற்கு முந்தைய சுரண்டல் ஆட்சிகளிலிருந்த தீய நடவடிக்கைகள் அனைத்தும் இல்லாததாக இருந்தது. ஆனால் அந்த செயல்முறைப்போக்கு, நவீன திருத்தல்வாத தலைவர்கள் தலைமைப் பொறுப்பிற்கு வந்து சோசலிசப் பாதையைவிட்டு விலகி, எதிர்ப்புரட்சியின் மூலமாக முதலாளித்துவத்தை மீண்டும் கொண்டுவர சதி செய்யத் தொடங்கிய உடன் நிலைமை மாறி ஊழல் மீண்டும் வந்துவிட்டது. உயர்ந்த சித்தாந்தம் இருந்தால், ஊழல் இருக்காது என்பதையே இது காட்டுகிறது. ஆனால் உயர்ந்த சித்தாந்தம் இல்லாதபோது, அல்லது சிந்தனையில் வெறுமை நிலவும் போது ஊழல் தொடர்ந்து இருப்பதோடு மட்டுமல்லாமல் ஆதிக்கமும் செலுத்துவதோடு அமைப்பையே இயக்குவதாகிறது.

### பேராசை பிறப்போடு வருவதல்ல

இது தொடர்பாக மற்றொன்றைப் பற்றியும் விவாதிக்க வேண்டியுள்ளது. மனிதன் தோன்றியதிலிருந்தே பேராசையும் ஊழல் செய்யும் மனப்பான்மையும் இருந்து வருகிறது என்று ஆளும் முதலாளித்துவவாதிகளும் அதன் அடிவருடி வட்டங்களும் விடாப்பிடியாக தொடர்ந்து செய்யும் பிரச்சாரத்தைப் பார்த்து ஏராளமான மக்கள், பிறப்போடு வந்த இந்த பேராசைதான் சுரண்டல், சமமின்மை, பாகுபாடு, இடர்பாடுகள் மற்றும் இன்னபிற தீமைகளுக்குக் காரணம் என்று கருதுகின்றனர். இதுவும் உண்மைக்குப் புறம்பானதாகும். எமது கட்சியின் நிறுவன பொதுச் செயலாளரும் இக்காலகட்டத்தின் தலைசிறந்த முன்னணி மார்க்சிய சிந்தனையாளர்களுள் ஒருவருமான தோழர் சிப்தாஸ் கோஷ் மனித சமுதாயத்தின் வளர்ச்சி வரலாற்றை விவரிக்கையில் பேராசை என்பது மனிதனோடு இயல்பாக வந்ததல்ல என்று எடுத்துக்காட்டியுள்ளார்.

அவருடைய வார்த்தைகளில் குறிப்பிட்டால் “பேராசை என்பது மனிதனின் இயல்பான குணம் – அது எப்போதும் இருந்தது, தொடர்ந்து எப்போதும் இருக்கும்– சமுதாயத்தில் சமமின்மை இருப்பதற்கு பேராசையே காரணம் என்றும் மனிதனின் பேராசையால்தான் சமுதாயம் வர்க்கங்களாக, ஏழை மற்றும் பணக்காரர்களாக, இருப்போர் மற்றும் இல்லாதவர்கள் என்று பிளவுபட்டுள்ளது என்று கருதுவது எப்படிப்பட்ட தவறான கருத்து? வாய்ப்புக் கிடைத்தால் ஒருவர் எப்போதுமே பொருளாதார ரீதியில் வளர்ச்சி அடைய விரும்புவார். எப்போதுமே மற்றவர்களை அடக்குவார், எனவேதான் எப்போதுமே சிலர் வளர்ந்துகொண்டிருக்கின்றனர், அதோடு சமமின்மை, இருப்போர் மற்றும் இல்லாதோர் எப்போதுமே சமுதாயத்தில் இருக்கிறது என்று பலர் கருதுகின்றனர். இதை அவர்கள் வரலாற்று ரீதியாகக் கூறவில்லை ஆனால் கற்பனையான கருத்துக்களால் கூறுகின்றனர். இல்லாவிட்டால், சமுதாயத்தில் சமமின்மை பிறப்பதற்கு மனிதனின் அடிப்படை குணாம்சங்கள் காரணமல்ல, மாறாக சமமின்மையின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ள சமுதாயம்தான் சமமின்மையை ஈனுவதோடு, இதை இயல்பான குணமாக மனிதனிடம் நீடிக்க செய்கிறது .கிட்டத்தட்ட விலங்கு குணத்தையும் கூட மனிதனிடம் நிலைநிறுத்துகிறது, ஆதிகால மனிதன் கூட்டாக வாழ்ந்தான்; கிளான் அல்லது குழுக்கள் பிளவுபடவில்லை. அப்போது வர்க்க பிளவற்ற சமுதாயம் உருவாகவில்லை, உரிமையாளர் வர்க்கம் உழைப்பாளர் வர்க்கம் என்ற பேச்சுக்கே இடமில்லை”. (தேர்வு நூல்கள் தொகுதி 2 பக் 7,8) அதிகரித்துவரும் ஊழலின் ஆணிவேரைத் தேடிப் பார்க்கும்போது, இந்த விழிப்புணர்வு மக்களிடம் வராவிட்டால் அவர்கள் எல்லாவிதமான பிறழ்வுகள், துயரம் மற்றும் வறுமையை சகித்துக்கொண்டே, எல்லாம் எப்போதும் இப்படியேதான் இருக்கும் என்று கருதிக்கொண்டே வாழ்வார்கள்.

### ஜனநாயக வெகுஜன இயக்கங்கள் மட்டுமே ஊழலை தடுத்துநிறுத்தும்

நீண்டகால கண்ணோட்டத்தோடு பார்த்தால், முதலாளித்துவம் இருக்கும் வரை ஊழலின் பிடியிலிருந்து விடுபடுவதற்கு வழியே இல்லை என்பது தற்போது தெளிவாகிறது. முதலாளித்துவம் தூக்கியெறியப்பட்டால், ஊழலின் ஆணிவேர் பிடுங்கி எறியப்படும். சுரண்டல் முதலாளித்துவ அமைப்பிற்கு முடிவுகட்டுவதற்கு மார்க்சிசம்–லெனினிச சித்தாந்தத்தை ஆயுதமாகக் கொண்டு முதலாளித்துவ–எதிர்ப்பு சோசலிசப் புரட்சியை உயர்ந்த பாட்டாளிவர்க்க அறநெறி, ஒழுக்கநெறி மற்றும் கலாச்சாரத்தின் அடிப்படையில் நடத்தி, விஞ்ஞான சோசலிசத்தைக் கட்டியமைப்பது உடனடித் தேவையாகும். முதலாளித்துவத்தைத் தூக்கியெறிவதற்கான போராட்டத்தோடு இணைக்காமல் அதற்கு ஏற்றதாகவும் மாற்றப்படாவிட்டால் ஊழலுக்கு எதிரான எந்தவொரு போராட்டமும் வெற்றியடைய முடியாது. முதலாளித்துவ சமுதாயத்தில் சட்ட நடவடிக்கைகள் மூலமாகவோ அல்லது மனதைப் பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்ற பழமையான மத சிந்தனைகளை மீண்டும் கொண்டுவருவதன் மூலமோ ஊழலை மொத்தமாக வேரறுக்க முடியும் என்று கருதியால் அவர்கள் கற்பனை உலகிலேயே சஞ்சரிக்கிறார்கள் என்று அர்த்தம்.

ஆனால் ஒரு சரியான செயல்முறைப் போக்கின் தர்க்கரீதியான இறுதிமுடிவாகத்தான் புரட்சி நடைபெறும் என்பதை நாமறிவோம். புரட்சி வருகின்ற வரை, பொதுமக்கள் குறிப்பாக உழைக்கும் வர்க்கத்தினர் அனைத்துவிதமான ஊழல் நடவடிக்கைகளுக்கும் எதிராகவும் ஊழலில் ஈடுபடும் எவர் ஒருவரையும் தண்டிக்காமல் விடக்கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்தும் ஜனநாயக வெகுஜன இயக்கங்களைக் கட்டவேண்டும். முதலாளித்துவ எதிர்ப்பு போராட்டத்தில் இது ஒரு குறுகியகால நோக்கமாகும். இந்த நாட்டில் விடுதலைப் போராட்டத்தின் உக்கிரமான தாக்கம் இருந்தவரை ஊழல் என்பது குறிப்பிடத்தக்க அளவு மட்டுப் படுத்தப்பட்டிருந்தது என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். அரசியல் விடுதலை கிடைத்து பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களிடம் சமரசத்தின் மூலமாக இந்திய தேசிய பூர்ஷ்வாக்களிடம் அதிகாரம் கைமாறிய பின்னர் சில ஆண்டுகள் வரைகூட, புகழ்பெற்ற விடுதலைப் போராட்டத்தின் தாக்கம் இருந்தபடியால் முறைகேடுகளில் ஈடுபடுபவர்கள் விலகியிருந்தனர். ஆனால் அந்தத் தாக்கம் படிப்படியாகக் குறைந்து முதலாளித்துவ ஆட்சி படிப்படியாக நிலைபெற்றதன் போக்கில் சுதந்திர இந்தியாவில் ஊழல் தனது அசிங்கத் தலையை உயர்த்தத் தொடங்கியது.

சிபிஐ(எம்), சிபிஐ போன்ற போலி மார்க்சிஸ்டுகள், தங்களது சமரசவாத, சமூக ஜனநாயகக் குணாம்சத்திற்கு ஏற்ப, போராட்டப் பாதையை விட்டு விலகியதோடு இடதுசாரி ஜனநாயக இயக்கங்களை உள்ளிருந்தே முடமாக்கியும், தொடர்ந்து ஆட்சியில் இருக்கவேண்டும் என்பதற்காக அதிகாரம் மற்றும் பதவிக்காக ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதரவைப் பெறுவதற்காக அவர்கள் ஆட்சியில் இருந்த இடங்களில் உருவான வெகுஜன இயக்கங்களை காட்டுமிராண்டித்தனமாக நசுக்கத் தொடங்கியதும் நிலைமை மேலும் மோசமடையத் தொடங்கியது. மக்கள் இயக்கத்தின் அழுத்தம் குறைந்து போனதால் ஆளும் அதிகாரத்தில் உள்ளவர்கள் தங்குதடையற்ற ஊழலில் கணக்குவழக்கின்றி, அச்சமின்றி ஈடுபடுவதற்கான மடைக்கதவுகளை திறந்துவிட்டன.

எனவே இன்றைய முதலாளித்துவ சமூக–அரசியல் அமைப்பில், ஒன்றுபட்ட சக்திவாய்ந்த துடிப்பான ஜனநாயக இயக்கங்களை உயர்ந்த பாட்டாளிவர்க்க அறநெறி, கலாச்சார மற்றும் ஒழுக்கநெறியின் அடிப்படையில், அதேநேரத்தில் முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சிகர இயக்கத்திற்கு ஏற்றவாறு விடாப்பிடியான, தொடர்ச்சியான இயக்கங்களை அலையலையாக நடத்துவதன் மூலமாக மட்டுமே எங்கும் வியாபித்திருக்கும் ஊழலுக்கு அணைபோட முடியும், அதிகாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும் இடத்திலும் இருப்பவர்கள் செய்யும் ஊழல் மலிந்த ஒழுக்கக்கேடான நடவடிக்கைகளுக்குத் தண்டனை பெற்றுத் தரவும் முடியும். இத்தகைய இயக்கம் உருவாக்கும் சூழலில் தான், இந்த இயக்கத்தின் உற்சாகம் உருவாக்கும் சிந்தனை மேடைதான் ஊழல், மெகா ஊழல்கள் முறைகேடுகள் ஆகியவை உருவாதற்கு உரிய தடையை ஏற்படுத்த உதவமுடியும்.

# மார்க்சிசம் சரியானது என்பதை ரஷ்யப் புரட்சி உறுதிப்படுத்தியது

*1ம் பக்கத் தொடர்ச்சி*

## சோவியத் புரட்சியும் சோவியத் சோசலிசமும் அவ்வழியினைக் காட்டியுள்ளது

கடந்த நூற்றாண்டின் இருபதுகளின் மத்திய காலப் பகுதியில் சிபிஐ கட்சியானது துவக்கப்பட்டது. சிபிஐ கட்சி துவக்கப்பட்ட அந்நேரம் உலகச் சூழ்நிலைமையானது வேறுபட்டிருந்தது. அதாவது, நவம்பர் 1917ஆம் ஆண்டு முதலாவது சோசலிச அரசானது ரஷ்யாவில் உருவாகியிருந்தது. அப்புரட்சியினால் உலகம் முழுவதிலும் ஓர் மாபெரும் தாக்கம் ஏற்பட்டிருந்தது. சோவியத் புரட்சியையும் மற்றும் சோசலிச நாட்டினையும் –அதாவது சோவியத் மண்ணை நோக்கி அனைத்து நாடுகளிலுமுள்ள சிந்திக்கும் மக்களும் உலகம் முழுவதிலுமுள்ள முற்போக்கு எண்ணம் கொண்ட மக்கட்பிரிவினரும் ஈர்க்கப்பட்டனர். வாழ்க்கையின் பிரச்சினைகளை தீர்த்திட அதனால் முடியும் என்ற இப்புரட்சியின் வெற்றியானது பலரையும் வியக்க வைத்தது. மார்க்சிசம் சரியென நிரூபிக்கப்பட்டு அது யதார்த்தத்தில் நடைமுறைக்கு வந்தது. மார்க்சிசம் ஒரு கற்பனாவாதம் என முதலாளித்துவவாதிகள் பிரச்சாரம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஆனால், இப்புரட்சியின் வெற்றியானது பாட்டாளிவர்க்கப் புரட்சியென்பது கற்பனாவாதமல்ல, இது நிஜம் என நிரூபித்ததோடு மார்க்சிச பாதையை பின்பற்றி சோசலிச நாடு என்ன செய்திட முடியும் என்பதனைக் காட்டியது. மார்க்சிச வழியில் சோசலிசத்தை கட்டிட முடியாதென முதலாளித்துவவாதிகள் கூறினார்கள். புரட்சியை நிறைவேற்றியதன் மூலம் மார்க்சிசப் பாதையை பின்பற்றினால் மட்டுமே புரட்சியானது முடியுமென்பதை லெனின் அவர்கள் அறுதியிட்டு நிரூபித்துக் காட்டினார்.

ஆனால், ரஷ்யா ஒரு பின்தங்கிய நாடாக இருந்தது என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். ரஷ்யாவானது சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியில் ஐரோப்பிய கண்டத்தின் மிகவும் நோய்வாய்ப்பட்ட நாடாக அறியப்பட்டிருந்தது. அது மிகவும் பின்தங்கிய நாடாக இருந்தது. அப்போதுதான் தொழில்மயம் துவங்கப்பட்டது. அந்நாட்டில் நிலப்பிரபுத்துவ நிலைமைகள், நிலப்பிரபுத்துவ உற்பத்தி சாதனங்கள் எங்கும் காணப்பட்டு அந்த பரந்துபட்ட நாட்டில் சோசலிசத்தை கட்டுவதென்பது மிகக்கடினமாயிருந்தது. லெனின் அவர்களும் அவர்களுக்குப் பின் அவரது மதிப்பிற்குரிய சீடரும் மற்றும் லெனினது கோட்பாடு மற்றும் நடைமுறையை பின்தொடர்ந்தவருமான தோழர் ஸ்டாலின் அவர்களும் பிற நாடுகளின் உதவியேதுமின்றி சுற்றிலும் எதிர்ப்பு மிகுந்த சூழ்நிலைமையில் நம்பமுடியாத குறுகிய காலத்தில் லெனினது பாதையில் நடைபோட்டு சோசலிசத்தைக் கட்டியெழுப்பினார். ஐந்தாண்டுத்திட்டம் என்பது ஸ்டாலின் அவர்களது உருவாக்கமாகும். ஐந்தாண்டுக்கான இலக்கானது நான்கு ஆண்டுகளிலேயே அடையப்பட்டு விட்டது. தொழிலாளர்கள் பெரிதும் ஈர்க்கப்பட்டு மிகையான ஊதியம் ஏதுமின்றி 12 மணி நேரம், 14 மணி நேரம் என பணியாற்றினர். மிகையான ஊதியம் வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் முன்வைக்கவில்லை. அவர்களுக்கு சோவியத் அரசாங்கமானது அவ்வாறு வழங்கிடவும் முடியவில்லை. அவ்வாறு அது பலகீனமாகவும் அந்த அளவிற்கு ஏழை நாடாகவும் இருந்தது. தங்களது சொந்த அரசை பலப்படுத்திட வேண்டுமென்பதை புரிந்து கொண்டதால், உழைக்கும் வர்க்கத்தினர் மணிக் கணக்காக வேலை செய்தனர்.

அந்த அளவிற்கு அவர்கள் அரசின் பொருளாதாரத்தை பலப்படுத்தியதால், மிக விரைவிலேயே ரஷ்யாவில் வேலையில்லாத் திண்டாட்டம் என்பது இல்லாமற் போனது. முன்பிருந்த சமூகத்தில் காணப் பட்ட அனைத்துப் பிரச்சினைகளும் ஒன்றன் பின் ஒன்றாக தீர்க்கப்பட்டுக்கொண்டிருந்தன. சோசலிசத்தின் தாக்கமானது அத்தகையதாக இருந்தது. வெறுமனே சோசலிசப் பொருளாதாரத்தை மட்டுமின்றி அரசியல், நல்லொழுக்கம், கலாச்சாரம், சமூகம், அறநெறி இன்னும் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய சோசலிசத்தை கட்டிய மைக்கும் செயல்முறைப் போக்கில் மதம், தேசியம், மொழி ஆகியனவற்றை மையப்படுத்திய வேறுபாடுகள் யாவும் தீர்க்கப்படும் போக்கு நிலவியது. அது எந்த ஒரு முதலாளித்துவ சமூகத்தையும்விட மிகவும் உயர்ந்ததொரு நாகரீகமாகும். எனவேதான் அப்புரட்சியை நினைவுபடுத்தும் வகையில் நவம்பர் புரட்சி தினத்தை நாம் அனுஷ்டிக்கின்றோம்.

இது ரஷ்யாவில்தானே நடந்தது, பின் அதை இங்கு நாம் ஏன் அனுஷ்டிக்க வேண்டும்? என சிலர் எண்ணுகின்றனர். இல்லை, அது ரஷ்யாவில்தான் நடந்தது. ஆனால், அது அனைத்து நாடுகளின் உழைக்கும் வர்க்கத்திற்கு ஒரு படிப்பினையாக இருந்தது. அது அனைத்து நாடுகளின், உலகம் முழுவதிலுமுள்ள பாட்டாளி வர்க்கத்திற்கு புரட்சியின் பாதையைக் காண்பித்தது. எனவே பாட்டாளி வர்க்கமும் மற்றும் பிற உழைக்கும் வெகுஜனங்களும் ரஷ்யாவில் நிறைவேறிய பாட்டாளி வர்க்க புரட்சியிலிருந்து நிறையவே கற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது.

சோவியத் ரஷ்யாவை கட்டியமைத்த அத்தகைய மாபெரும் புரட்சியானது பின்னர் தோல்வியுற்றது. ஏன் அது தோல்வியடைந்தது? அதுவும்கூட மேற்கொண்டு விவாதிக்க வேண்டியிருக்கின்றது. ஆனால் சுருக்கமாகக் கூறினால், அது மார்க்சிச லெனினிசப் பாதையை கடைபிடித்ததால் புரட்சியினை வெற்றி கண்டது, அதே நேரம் அது மார்க்சிசம்–லெனினிசத்திலிருந்து விலகிச் சென்றதனால் சோசலிசம் வீழ்ச்சியுற்றது என்பதுதான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய பாடமாகும். ஆக, புரட்சி எதிர்ப்புரட்சி ஆகிய இரண்டும் மார்க்சிசம் வெல்லற்கரியதாவும் இன்றியமையாததாக இருப்பதையுமே நிரூபித்திருக்கின்றது. ஆயினும் ரஷ்யாவின் பாட்டாளி வர்க்கப் புரட்சியானது வெற்றிகரமான முதல் பாட்டாளி வர்க்கப் புரட்சியாக இருப்பதனால், அதிலிருந்து நாம் பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

பெரும் தொழிற்சாலைகள் யாவும் தனிநபர் வசம் இல்லாமல் அரசின் கட்டுப்பாட்டிற்குள் இருந்தன. உற்பத்தி சாதனங்கள் மீதான சமூக உடைமை நிறுவப்பட்டது. கூட்டுப்பண்ணை முறை நடைமுறைக்கு வந்தது. அத்துடன் அரசு பண்ணை விவசாயமும் நிறுவப்பட்டது. தொழிலாளர் சந்தையென்பது அங்கு இருக்கவில்லை. உழைப்பை விலைக்கு வாங்க முடியவில்லை. சுரண்டப்படும் மக்களின் விடுதலையானது அடையப்பட்டது. மனிதனை மனிதன் சுரண்டுவதிலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். ஏனெனில் அது போன்ற சுரண்டலுக்கான வாய்ப்பு அங்கிருக்கவில்லை. உழைப்பு சக்தியை ஒருவர் விலைக்கு வாங்கிட முடியவில்லை. உங்கள் வசம் நிலம் இருந்தால் அதில் நீங்களே உழைத்தாக வேண்டும். சோசலிச அமைப்பு முறையை முதலில் நான் சுருக்கமாக இவ்வாறாக விவரிக்கின்றேன். இந்த அமைப்பு முறை வெறுமனே உழைக்கும் வர்க்கம் மட்டுமல்லாது சமூகத்தில் சிந்திக்கும் மக்கள் மத்தியில் மிகப்பெரும் அளவில் ஈர்ப்பினை ஏற்படுத்தியது. குறிப்பாக சுரண்டல் அமைப்பு முறைக்கு பலியானவர்கள் அவர்கள் விடுதலையடைந்த உண்மையான நிலைமையையும் விடுதலைக்கான உண்மையான வழியையும் சோசலிசத்தில் கண்டனர். இது பாட்டாளி வர்க்கப் புரட்சியாகும்.

## முதலாளித்துவ கலாச்சாரமும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரமும்

இப்பின்னணியில்தான் இந்தியாவில் சிபிஐ கட்சியானது உருவானது. சமூகத்தின் மேல்தட்டிலிருந்த மிகச்சிறந்த மைந்தர்களும் இளம் பெண்டிரும் நாடு முழுவதும் சிபிஐயில் இணைந்தனர். சிபிஐ கட்சியிலிருந்த தலைவர்களும் சாதாரணமான தலைவர்களாக இல்லை. அவர்கள் எண்ணற்ற தியாகம் புரிந்தவர்களாக இருந்தனர். எவையெல்லாம் நற்குணாம்சங்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ, அதாவது நேர்மையானவர்களாக, அறிஞர்களாக, பெரும் கல்விப்புலமை பெற்றவர்களாகவும்கூட அவர்கள் இருந்தனர். அக்கட்சி துவங்கிய நேரத்தில் அத்தகைய தலைவர்கள் இருந்தனர். ஆனாலும், அந்த கம்யூனிஸ்ட் கட்சியை கட்டிட உண்மையிலேயே முயற்சியெடுத்தும் ஏன் அவர்கள் தோற்றுப் போனார்கள்? அதுதான் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் ஆராய்ந்து பார்த்த கேள்வியாகும். அக்கேள்விதான் இத்தகைய நிகழ்வுக்கான காரணத்தை கண்டறிய அவருக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியது. அத்தகைய பல நற்குணாம்சங்கள் இருந்தும்கூட சிபிஐ கட்சியானது ஏன் ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியாக கட்டப்படமுடியவில்லை? அதன் தலைவர்கள் மிகவும் படித்தவர்களாகவும் நேர்மையானவர்களாகவும் இருந்தனர். அவர்களின் தியாக மனப்பான்மை முன்னுதாரணமாக இருந்தது. பல்வேறு களங்களில் அவர்கள் உயரிய அறிவாற்றல் கொண்டிருந்தனர். இருப்பினும் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியினைக் கட்டிட அவர்களால் முடியவில்லை. தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் தனது போராட்டத்தின் போக்கில் அவர்கள் எங்கே தவறினார்கள் என்பதைப் புரிந்து கொண்டார். கட்சியின் தலைவர்களது வாழ்க்கைமுறை உகந்த முறையில் அனைத்தையும் தழுவிய போராட்டத்தின் வாயிலாக மாறவில்லையென்றால், நீங்கள் எவ்வளவுதான் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் மற்றும் மாசேதுங் ஆகியோரின் நூல்களைப் படித்தாலும், நீங்கள் ஒரு கம்யூனிஸ்ட்டாக ஆகிட முடியாது என்பதைக் குறிப்பாகப் புரிந்துகொண்டார்.

ஒரு கம்யூனிஸ்ட்டாக ஆகிட வேண்டுமாயின், பாட்டாளி வர்க்கக் கலாச்சாரத்தை நீங்கள் புரிந்து கொண்டு அதனை உணர்வுபூர்வமாக கைக்கொள்ள வேண்டும். இச்சகாப்தத்தின் மிக உயர்ந்த கலாச்சாரம் பாட்டாளிவர்க்கக் கலாச்சாரமாகும். அக்கலாச்சாரமே ஒரு மனிதனை கம்யூனிஸ்ட்டாக ஆக்குகின்றது. பாட்டாளிவர்க்க கலாச்சாரம் என்றால் என்ன? உழைக்கும் வர்க்கத்தினருக்கு உழைப்புச் சக்தியைத்தவிர விற்பதற்கு எதுவுமில்லை என்பதை மார்க்ஸ் அவர்கள் சுட்டிக்காண்பித்தார். எனவேதான் அவர்கள் பாட்டாளிகள் என அழைக்கப்படுகின்றனர். புரட்சிகர பாட்டாளி வர்க்கத்திற்கு தனிச்சொத்து என்ற உணர்வு இருப்பதில்லை. ஆக, பாட்டாளி வர்க்கக் கலாச்சாரமானது தனிச்சொத்து மனப்பான்மையிலிருந்து விடுபட்டதாக விளங்குகிறது. நாம் நடுத்தர வர்க்க குடும்பங்கள் மற்றும் குட்டி முதலாளித்துவ குடும்பங்களில் பிறந்திருக்கிறோம். நாம் ஒரு முதலாளித்துவ சுற்றுச்சூழலில் பிறந்திருக்கிறோம். ஒரு குழந்தை சிந்திக்க ஆரம்பிக்கும்போதே, அப்போதிலிருந்து அது தன்னைப்பற்றியும் தனிச்சொத்து பற்றியும் நினைக்கின்றது. இது என்னுடையது, இது எனது தனிச்சொத்து என்றெண்ணுகிறது. முதலாளித்துவ கலாச்சாரமானது, நாம் அழைக்கின்ற தனிச்சொத்து மனப்பான்மையின் அடிப்படையில் உருவாகின்றது.

பிரெஞ்சு புரட்சி, அமெரிக்க சுதந்திரப் போர், ஜெர்மெனியின் விவசாயிகள் புரட்சி மற்றும் மறுமலர்ச்சி இயக்கம் போன்ற முதலாளித்துவ ஜனநாயகப்புரட்சி நடைபெற்ற நாட்களில் தனியுடைமை, தனிச்சொத்து மற்றும் தனிநபர் சுதந்திரம் என்ற இந்த உணர்வே ஒரு மாபெரும் விஷயமாக இருந்தது. ஏனெனில், நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் தனிச்சொத்து என எதுவுமிருக்கவில்லை. அது ஒரு முழுமையான எதேச்சையதிகார ஆட்சியாக இருந்தது. அரசர் விரும்பினால், உங்களுக்கு ஒரு முடியரசு நாட்டையே தர முடியும்; அவர் விரும்பினால் அவர் உங்கள் தலையைக்கூட கொய்துவிட முடியும். எதேச்சதிகார நிலப்பிரபுத்துவ ஆட்சியில் தனிநபர் சுதந்திரம் என்பது இல்லை. எனவே, இன்றிருக்கின்ற முதலாளித்துவ சமுதாயத்தை கொண்டுவந்த, முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி நடைபெற்ற நாட்களில் தனிநபர் விடுதலை, சகோதரத்துவம், தனிநபர் சுதந்திரம் பற்றிய கோட்பாடுகள் மாபெரும் விஷயமாக இருந்தது. ஆனால், மனிதனை மனிதன் சுரண்டும் உற்பத்தி சாதனங்கள் மீதான தனிநபர் உடைமையின் அடிப்படையில் முதலாளித்துவமானதுகூட இருப்பதால் காலப்போக்கில் இங்கு சுரண்டலானது மேலும் மறைமுகமாக நடந்து கொண்டிருக்கின்றது.

உழைக்கும் வர்க்கத்தின், ஒடுக்கப்பட்ட பிற வெகுஜன பிரிவினரின் உண்மையான விடுதலையை இந்த முதலாளித்துவ சமுதாயத்தில் அடைந்திட முடியாது. முதலாளித்துவ வர்க்கத்தின் மூலதனமானது உழைக்கும் வர்க்கத்தை சுரண்டுவதினால் வளர்கின்றது. எனவே, முதலாளித்துவத்தில் ஒருசில பணக்காரர்களுக்கும் பெருமளவிலிருக்கின்ற வறுமையுற்றிருக்கும் வெகுஜனங்களுக்குமிடையேயான இடைவெளியானது மென்மேலும் அதிகரித்துக்கொண்டேயிருக்கின்றது. உழைக்கும் வர்க்கத்தை சுரண்டுவது குறைந்தால் முதலாளித்துவம் அழிவின் விளிம்பிற்குச் சென்றுவிடும்.

உழைப்பு சக்தியை ஒரு முதலாளி விலைக்கு வாங்குகிறார். தொழிலாளர்கள் தங்களது உழைப்பு சக்தியை விற்கின்றனர். உழைப்பாளர்களின் உழைப்பு சக்தியை விலைக்கு வாங்குவதன் மூலம் முதலாளித்துவ உடைமையாளர் லாபத்தை ஈட்டுகின்றார். உழைப்பு சக்தியை விலைக்கு வாங்கிடும் ஒரு மனிதனும் உழைப்பு சக்தியை விற்கும் ஒருமனிதனும் சமமாக இருக்க முடியுமா? அப்படியிருக்க முடியாது. ஆகவே, முதலாளித்துவ சமுதாயத்தில் இன்று ஜனநாயகம் என்பது பெரும் பேச்சாக மட்டுமே இருக்கின்றது; ஜனநாயகமானது 10 சதவீதமாக உள்ள முதலாளிகளுக்கு மட்டுமே இருக்கின்றது. முதலாளித்துவம் தோன்றிய காலகட்டத்தில், சுதந்திர வணிகம் அல்லது சுதந்திர பொருளாதாரப் போட்டி இருந்த சமயத்தில் முதலாளித்துவ ஜனநாயகமானது விடுதலை, சுதந்திரம் மற்றும் ஜனநாயக உரிமைகளை ஓரளவிற்கு உத்திரவாதப்படுத்தியது. ஆனால் இப்போது தனது சொந்த வளர்ச்சியினால் மிகப்பெரும்

தொடர்ச்சி 6ம் பக்கம்

# ஓருவர் கம்யூனிஸ்ட்டாவதற்கு பாட்டாளிவர்க்க கலாச்சாரத்தை புரிந்துகொண்டு, மேலும் விழிப்புணர்வோடு கைவரப்பெறவேண்டும்

5ம் பக்கத் தொடர்ச்சி

அளவிலான செல்வம் ஒருசிலர் கைகளில் குவிந்து முதலாளித்துவம் கடும் நெருக்கடியில், தீர்க்கவியலாத நெருக்கடியில் நுழைந்திருக்கின்றது. அதே சமயம் கோடிக்கணக்கான பரந்துபட்ட வெகுஜனங்கள் அவர்களது வேலையை இழந்தும், விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுமிருக்கின்றனர். இத்தகைய ஒரு சமுதாயத்தில் ஜனநாயகம் பற்றிப் பேசுவதென்பது முற்றிலும் கேலிக்குரியதாகும்.

முதலாளிகளுக்கும் பாட்டாளிகளுக்குமிடையேயான வேறுபாடு எங்கிருக்கின்றது? முதலாளித்துவ கலாச்சாரமனாது தனிநபர் உடைமை, தனிச்சொத்து மற்றும் தனிநபர்வாதத்தின் அடிப்படையில் உள்ளது. முதலாளித்துவ கலாச்சாரம் கொண்ட ஒருவர் தனிச்சொத்து எண்ணத்தினால் தனிநபர்வாதத்திற்கு பலியாகின்றார். பாட்டாளிகள் தங்களது உழைப்பு சக்தியை விற்கும் பிரிவினரைச் சார்ந்தவர்களாக இருக்கின்றனர். உழைப்பு சக்தியை விற்பதைத்தவிர அவர்களிடம் வேறொன்றுமில்லை. அவர்களிடம் தனிச்சொத்து ஏதுமில்லை. அவர்கள் தங்கள் உழைப்பு சக்தியை விற்கின்றனர். முதலாளி அவருக்கு என்ன சம்பளமாகக் கொடுக்கின்றாரோ அதனை அவர் பெற்றுக்கொள்கிறார். லெனின் அவர்கள் சுட்டிக்காண்பித்தது போல, அவர்கள் கூலி அடிமைகள்.

ஆனால் சரித்திர ரீதியில் புரட்சிக்குத் தலைமையேற்றிடக் காத்திருக்கும் பாட்டாளி வர்க்கம் கூலி அடிமைகளின் உண்மையான கலாச்சாரம் தன்நிலை சாராத சமூக கலாச்சாரமாக இருக்கின்ற காரணத்தால் அதுவே மாபெரும் கலாச்சாரமாகும். அவர்கள் சமூகத்திற்காக கூட்டாக உழைக்கின்றனர். அவர்களில் எவரும் தனியாக வேலை செய்ய முடியாது. பெரும் தொழிற்கூடங்களில் அவர்கள் கூட்டாக வேலை செய்கின்றனர். அதன்பின்னர் உற்பத்தி நடைபெறுகிறது. அவர்கள் உற்பத்தி செய்வதெல்லாம் சமூகத்தின் ஒட்டுமொத்த பயன்பாட்டிற்காகவே தனிச்சொத்திலிருந்து அவர்கள் விடுபட்டிருக்கின்றனர்.

### பாட்டாளிவர்க்க கலாச்சாரத்தை அடையப்பெறாமல் ஓருவர் ஒரு கம்யூனிஸ்ட்டாக ஆகிவிட முடியாது

கூட்டுத்தன்மைதான் இன்றைய மாபெரும் கலாச்சாரமாகும். யார் அதனை அடையப்பெற்றவர்களோ அவர்கள்தான் மக்களின் பொது நலனுக்காக போராடுவார்கள். அவர்கள் மட்டுமே தனிப்பட்ட நலன்கள், சுயநலவாதம், தன்மையவாதம் எல்லாவற்றிலுமிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள முடியும்.

மார்க்ஸ் அவர்கள் இந்த உயர்ந்த மதிப்பு கோட்பாட்டினை பற்றி கூறுகையில், அதனை மனிதாபிமானம் என ஏன் அழைக்கக்கூடாது என பலர் அவரைக் கேட்டனர். மனிதாபிமானம் பற்றிய கோட்பாடானது முதலாளித்துவ மனிதாபிமானம் பற்றிய கோட்பாடாகும். அது மதிப்புகள், பாசம், பரிவு, உறவு அனைத்தும் பற்றிய முதலாளித்துவ கோட்பாடாகும். கூட்டுத்தன்மை என்பதை மார்க்ஸ் அவர்கள் கூறுகையில், ஆம் இது மனிதாபிமானம்தான். ஆனால், அது தனிச்சொத்து நீங்கிய மனிதாபிமானம் என்றார். தனிச்சொத்து நீங்கிய மனிதாபிமானம் இனிமேலும் மனிதாபிமானமோ, பூர்ஷ்வா மனிதாபிமானமோ அல்ல. இது உயர்ந்ததொரு மதிப்புணர்வாகும். இதனை ஒருவர் அவரது வாழ்க்கையில் அடையப் பெறாவிடில் அவர் கம்யூனிஸ்ட்டாக ஆக முடியாது.

அனைத்துத் தொழிலாளர்களும் பாட்டாளிகளும் இதனை உணர்ந்திருக்கின்றனரா? இல்லவே இல்லை. அவர்கள் யாவரும் முதலாளித்துவ, சீரழிந்த முதலாளித்துவ சமுதாயத்தில் பிறந்திருக்கின்றனர். அவர்கள் முதலாளித்துவ கலாச்சாரத்தையும், சுயநலவாதத்தையும், தன்மையவாதத்தையும், சீரழிந்த கலாச்சாரத்தையும் பெற்றிருக்கின்றனர். ஆனால் யதார்த்தத்தில் அவர்கள் தங்களது வாழ்க்கையில் மார்க்ஸ் காண்பித்தவாறு, சரித்திர ரீதியில் அவர்களது வேலைக் கலாச்சாரம் கூட்டுத்தன்மை கொண்டதாக இருக்கின்றது. அவர் மேலும் சுட்டிக் காண்பித்தவாறு, உழைக்கும் வர்க்கமானது இவ்வுலகினை மாற்றும் என்றார். ஆனால் உலகினை மாற்றவேண்டுமெனில் அவர்கள் தங்களை முதலில் மாற்றிக்கொள்ள வேண்டும் என்றார். இதன் பொருள், உழைக்கும் வர்க்கமானது கடுமையான மற்றும் உணர்வுபூர்வமான போராட்டத்தின் மூலமாக முதலாளித்துவ சுற்றுச்சூழலிலிருந்து பெற்ற முதலாளித்துவ கலாச்சாரத்தையும் சிந்தனையையும் கைவிட வேண்டுமென்பதாகும்; அவர்கள் தங்களது சொந்த வர்க்கக் கலாச்சாரத்தை உணர்வுபூர்வமாக அடையப்பெற வேண்டும்.

குட்டிமுதலாளித்துவ குடும்பங்களிலிருந்து வந்திருக்கின்ற நாமும்கூட கூட்டுத்தன்மை, சுயநலமின்மை, தன்மையமின்மை, தனிநபர்வாதமின்மை எனும் பாட்டாளிவர்க்க புரட்சிகர கலாச்சாரத்தை பெற்றிட வேண்டும். எனது தனிநபர்வாதத்தையும் தனிப்பட்ட நலன்களையும் உணர்வுபூர்வமாக எதிர்த்துப் போராடுவதன் வாயிலாக நான் தன்நிலை சாராதவனாகி சமுதாயத்திற்காக போராடுவேன். இது ஒரு மாபெரும் கலாச்சாரமாகும். இது ஒரு உன்னத கலாச்சாரமாகும். அது மட்டுமல்ல. ஒரு முதலாளித்துவ சமூகத்தில் பிறந்திருப்பதினால் நாம் முதலாளித்துவ வர்க்க கண்ணோட்டத்தை பெற்றிருக்கின்றோம். பாட்டாளி வர்க்க கலாச்சாரத்தை அடையப் பெறுவதற்கான போராட்டத்துடன் பாட்டாளி வர்க்க கண்ணோட்டத்தையும் மற்றும் மார்க்சிச வழியில் சிந்திப்பதையும் கைவரப்பெறுவதற்கும்கூட, அதாவது இயக்கவியல் பொருள்முதல்வாத வழியில் சிந்திப்பதற்கும்கூட நாம் போராடிட வேண்டும்; மார்க்சிய வழியிலான சிந்தனையின்றி நாம் பொருளாயத உலகின் உண்மையை கண்டுபிடித்திட இயலாது. இந்த பாட்டாளிவர்க்க கலாச்சாரமும் இயக்கவியல் பொருள்முதல்வாத வழியிலான சிந்தனையும் ஒன்றுக்கொன்று துணையாகவும் ஆதரவாகவும் செயலாற்றும். வெறுமனே ஒருவர் தன்னை ஒரு கம்யூனிஸ்ட்டாக அறிவித்துக்கொண்டு தனது வாழ்க்கையில் இக்கலாச்சாரத்தை அடைந்திடவில்லையென்றால் அவர் கம்யூனிஸ்டாக ஆகவில்லை என்பதாகும். கட்சியானது ஒருவரை ஒரு கம்யூனிஸ்ட் தலைவரென அறிவித்தாலும்கூட, இக்கலாச்சாரத்தை அவர் பெற்றிடவில்லை என்றால் அவர் ஒரு கம்யூனிஸ்ட் இல்லை.

சிபிஐ கட்சியை கட்ட முன்வந்தவர்கள் நேர்மையான, நல்ல, உயரிய தியாகம் புரிந்த மனிதர்களாக இருந்திருக்கலாம் என தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் சுட்டிக்காண்பித்தார். அவர்கள் கட்சிக்காக நேர்மையாகவும் உண்மையாகவும் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள். ஆனால், அக் கட்சியைக் கட்ட முன்வந்த தலைவர்கள் தங்களது சொந்த வாழ்க்கையில் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரத்தை அடையப்பெறுவதற்கான போராட்டத்தை நடத்தாத காரணத்தால் அவர்களால் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கிட முடியவில்லை. அவர்கள் தங்கள் வாழ்க்கையில் பழைய முதலாளித்துவ மனிதாபிமானக் கோட்பாடுகளை எதிர்த்துப் போராடவில்லை. அவர்கள் நல்லவர்களாக, நேர்மையானவர்களாக, அறிவார்ந்தவர்களாக, கல்வியில் புலமை பெற்றவர்களாக மற்றும் கறைபடியாதவர்களாக இருந்திருக்கலாம். ஆனாலும் அவர்கள் கம்யூனிஸ்டாக ஆக முடியவில்லை. கம்யூனிஸ்ட்கள் இச்சமூகத்தின் மிகவும் உன்னதமானவர்கள் ஆவார்கள். கம்யூனிஸ்ட் கலாச்சாரமானது மிக உயர்ந்த கலாச்சாரமாகும். கம்யூனிஸ்ட்டாக ஆவதென்பது சாதாரணமான போராட்டமல்ல. ஒரு கம்யூனிஸ்ட் கட்சியுனுள் இணைவதனால் ஒருவர் அக்கணமே ஒரு கம்யூனிஸ்ட்டாக ஆவதில்லை. ஒருவர் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தாக வேண்டும். அவர் போராட்டங்களை நடத்தி, உயர்ந்த கலாச்சாரத்தினை அடையப்பெற்று, தனிப்பட்டது என்ற எதுவும் இருக்கக்கூடாது. தன்னிடம் என்னவெல்லாம் இருக்கின்றதோ அவற்றினை சமுதாயத்திற்குத் தந்திடவேண்டும். பருண்மையாகக் கூறினால், இன்று சமுதாயத்திற்கு தருவதென்பது பாட்டாளி வர்க்க புரட்சிகர கட்சிக்கு தருவதென்பதாகும்.

### தனிப்பட்ட நலன்களை வர்க்கம், கட்சி மற்றும் புரட்சியின் நலனுடன் ஐக்கியப்படுத்திக்கொள்ள வேண்டும்

இதனை தோழர் கோஷ் அவர்கள், ஒருவரது தனிப்பட்ட நலன்களை சமுதாயத்தின் நலன்களோடு ஐக்கியப்படுத்திக்கொள்ளுதல் என்று ஒரு புதிய வார்த்தையில் கூறுகின்றார். பருண்மையாகக் கூறினால் இதன் பொருள், ஒருவரது தனிப்பட்ட நலனை பாட்டாளிவர்க்க நலனுடன் ஐக்கியப் படுத்திக்கொள்ளுதல் என்பதாகும். பாட்டாளி வர்க்க நலன் மற்றும் எனது நலன் ஆகிய இரண்டும் ஒன்றே. பாட்டாளி வர்க்கம் என்பது அமைப்பு ரீதியிலான பாட்டாளி வர்க்கமாகும். இதன் பொருள் பாட்டாளிவர்க்க புரட்சிகரக் கட்சி என்பதாகும். இதன் அர்த்தம், எனது நலன் மற்றும் பாட்டாளி வர்க்க புரட்சிகரக் கட்சியின் நலன் ஆகிய இரண்டும் ஒன்றே. மேலும் இதன் பொருளானது, எனது நலன் மற்றும் பாட்டாளி வர்க்க புரட்சியின் நலனும் ஒன்றே என்பதாகும். ஒருவர் புரட்சியினை இவ்வாறாக புரிந்து கொண்டு அவரது தனிப்பட்ட நலன்களை புரட்சி மற்றும் புரட்சிகரக் கட்சிக்கு சமர்ப்பித்து விட்டாரென்றால், அவரால் உண்மையில் தனிப்பட்ட நலன்களை கட்சியின் நலன்களுடன் ஐக்கியப் படுத்திக்கொள்ள இயலுமென்றால் அப்போது மட்டுமே ஒருவரால் ஒரு நல்ல கம்யூனிஸ்ட்டாக ஆகிட முடியும். நல்ல கம்யூனிஸ்ட்களாக அனைத்து தோழர்களும் உடனடியாக ஆகிட முடியாது. கட்சியினுள் நல்ல கம்யூனிஸ்ட்டுகளாக ஆகிடத்தேவையான இத்தரத்தினை அடைவதற்கான போராட்டத்தை அவர்கள் நடத்திட வேண்டும். பொதுவான தோழர்களைப் பொறுத்த மட்டில், கம்யூனிஸ்ட் தரத்தை அடையப்பெற அவர்கள் தங்களின் தனிப்பட்ட நலன்களுக்கு மேலாக கட்சியின் நலனைக் கருதிட வேண்டும். இப்போராட்டத்தை உக்கிரப்படுத்துவதன் மூலம் இறுதியில் ஒருவர் ஒரு நல்ல கம்யூனிஸ்ட் ஆகின்றார். தலைவர்களனைவரும் நல்ல கம்யூனிஸ்டுகளாக ஆவதற்கான இப்போராட்டத்தினை ஊக்கப் படுத்திடவும் பலப்படுத்திடவும் வேண்டும்.

### எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியானது உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியாக நிறுவப்பட்டிருக்கிறது

எனவே தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள், கம்யூனிஸ்ட் என்றழைக்க முடிந்த கட்சி ஒன்று ஏதும் அப்போது இல்லாததால் ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியை கட்டிடத் துவங்கினார். ஒரு நாட்டில் பல கம்யூனிஸ்ட் கட்சிகள் இருக்க முடியாதென அவரே சுட்டிக்காண்பித்திருக்கிறார். நாட்டில் ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி ஒன்று இருக்குமேயானால், ஒரு புதிய கட்சியை துவக்கிட எந்த உரிமையும் எனக்கில்லை என்று அவர் கூறினார். நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சியென எதுவும் இல்லாததை நான் கண்டதால் அது எவ்வளவுதான் கடினமாக இருப்பினும் ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியை கட்டிட வேண்டிய கடமை என்மீது விழுந்தது என்று அவர் கூறியிருக்கிறார். நம்மைப்போன்ற ஒரு பரந்த நாட்டில் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை கட்டுவதென்பதும் அத்தகைய தரத்தில் புரட்சி, வர்க்கம் மற்றும் கட்சிக்காக தங்களது தனிப்பட்ட நலன்களை கைவிடக்கூடிய தொண்டர்கள் மற்றும் தலைவர்களை உருவாக்குவதென்பதும் ஒரு சுலபமான கடமையேயில்லை. செய்தி ஊடகங்களிளிருந்து எந்த ஆதரவும் இல்லை. எங்கிருந்தும் நிதி ஆதரவு இல்லை. பட்டினியில் கிடந்து தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் இக்கட்சியினைக் கட்டினார். நம்முடையதைப் போன்ற ஒரு பரந்த நாட்டில் ஒருசில உற்ற தோழர்களைக் கொண்டு அவர் இந்த எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியைக் கட்டினார். இக்கட்சிதான் உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இக்கட்சிதான் சுரண்டப்படும் மக்களின் அனைத்துப் பிரிவினரின் விடுதலைக்காகப் போராடும் கட்சியாகும்.

நமது கட்சியானது வளர்ந்து கொண்டிருக்கும், மிக விரைவாக வளர்ந்து கொண்டிருக்கும் கட்சி என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பெங்களூரில் நாம் கட்சிப்பணியை துவக்கிய போது நம்மைப் பார்த்தவர்கள் இன்று நம்மைப் பார்த்தால் இக்கட்சிதான் மிக விரைவாக வளர்ந்துகொண்டிருக்கும் கட்சி என நிச்சயமாக ஒரு முடிவிற்கு வருவார்கள். புரட்சி என்ற கேள்வியை ஒப்பிடுகையில் நமது கட்சி மிகச்சிறியதே. அதில் சந்தேகமேதுமில்லை. அதைப்பற்றியொரு மாயை நமக்கு வேண்டாம். ஆனால், பிற கட்சிகளுடன் ஒப்பிடுகையில் நமது கட்சியின் வளர்ச்சி குறித்துப் பேசுவதானால், மிக வேகமாக வளர்ந்து வரும் கட்சி இதுதான். சமுதாயத்திலிருக்கும் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான வழியினை காணமுடியாததலால், புத்திகூர்மையுள்ள இளைஞர்களும் கல்லூரி மாணவர்களும் கட்சியினால் ஈர்க்கப்பட்டு போராட்டங்களில் இணைந்து கொண்டிருக்கின்றனர்.

### முதலாளித்துவமானது வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் நெருக்கடியை பிறப்பித்து வருகிறது

பொருளாதார நெருக்கடி மட்டுமின்றி வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலுமான நெருக்கடி வாழ்க்கையை துயரமிக்கதாக்கி வருகிறது. நிச்சயமாக பொருளாதார நெருக்கடி மிகப்பெரும் நெருக்கடியேயாகும். காங்கிரஸ் கட்சியானது நாட்டை சீரழித்து விட்டது. பாஜக கட்சியானது ஆட்சியில் அமர்ந்த

தொடர்ச்சி 7ம் பக்கம்

# இன்று ஒரு கம்யூனிஸ்டிற்கான உயர்ந்த தரமென்பது வர்க்கம், கட்சி, புரட்சி ஆகியவற்றின் நலனுடன் தன் தனிப்பட்ட நலனை முழுமையாக ஐக்கியப்படுத்திக் கொள்வதில்தான் இருக்கிறது

*6ம் பக்கத் தொடர்ச்சி*

பின் அனைத்து பிரச்சினைகளையும் மேலும் தீவிரமாக்கி தேசத்தை சீர்குலைக்கும் செயல்முறைப் போக்கை முடுக்கிவிட்டிருக்கிறது. மிகவும் ஜனநாயக பூர்வமற்ற வழியில் பொருளாதார மாற்றங்கள் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. எங்கெங்கும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அனைத்தும் விண்ணை முட்டிக்கொண்டிருக்கின்றன. சில நாட்களுக்கு முன்புதான் இதே பெங்களூர் நகரத்தில் மத்திய அரசாங்கத்தின் பி எஃப் கொள்கைக்கெதிராக ஆடை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைப் பெண் தொழிலாளர்கள் லட்சக்கணக்கில் தெருக்களில் இறங்கிப் போராடினார்கள். அப்பெண்கள் காட்டிய தைரியத்தையும் நெஞ்சுரத்தையும் கண்ட பாஜக அரசாங்கம் பயந்து போய் அந்த பி எஃப் கொள்கையை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. இந்திய ஜனநாயகப் போராட்டங்களின் சரித்திரத்தில் இதுபோன்ற வெற்றி எப்போதாவதுதான் காணப்படுகிறது.

இருப்பினும் அது ஒரு தன்னியல்பாக நடைபெற்ற போராட்டமே. வாழ்க்கையின் சுமையையும் சித்திரவதையையும் தாங்கமுடியாமல் ஆடை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைப் பெண்கள் தெருக்களில் இறங்கிப் போராடினார்கள். நம் நாட்டில் பல போராட்டங்கள் திடீரென வெடித்து கிளம்புகின்றன. அவை சில காலம் கழித்து பிசுபிசுத்துப் போய் விடுகின்றன. நிர்பயா கூட்டு பாலியல் நிகழ்வுக்குப் பின்பு டில்லியில் எத்தகைய பெரும் எதிர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்றன! ஆனால் அந்த போராட்டமும் பிசுபிசுத்துப்போனது. நமது நாட்டில் பெண்கள் தினந்தோறும் பாலியல் பலத்காரத்திற்கு உட்பட்டுக் கொண்டிருக்கின்றனர். உணர்வுபூர்வ மற்றும் அமைப்புரீதியிலான முயற்சிகள் எடுக்கப்படவில்லையெனில் இத்தகைய கொடுமையான குற்றங்களை தடுத்து நிறுத்திட முடியாது. உணர்வுபூர்வ மற்றும் அமைப்பு சார்ந்த போராட்டம் இன்று மிகவும் அத்தியாவசியமாயிருக்கின்றது. சீரழிந்துவரும் தங்களது வாழ்க்கை நிலைமையை தாங்கிக்கொள்ள முடியாமல் பி யு பேராசிரியர்களும்கூட போராட்டங்களில் அணிவகுத்துச் சென்று கொண்டிருக்கின்றனர்.

ஐரோப்பா முழுவதிலும் போராட்டங்கள் வெடித்துக் கிளம்பிய வண்ணமிருக்கின்றன. முதலாளித்துவ நெருக்கடியை எங்கும் பார்த்திட முடிகிறது. கிரேக்க நாட்டிலிருந்து துவங்கி அதனை நீங்கள் பார்த்திடலாம். கிரேக்க நாடு பெரும் நெருக்கடியில் சிக்கித்தவித்துக்கொண்டு அங்குள்ள தாய்மார்களும் தந்தைமார்களும் ஒரு அற்பத் தொகைக்காக தங்களின் குழந்தைகளை விற்றுக்கொண்டிருக்கின்றனர். ஒரு தாய் அவளது குழந்தையை விற்பதை உங்களால் கற்பனை செய்து பார்த்திட முடிகிறதா? சமூகமானது அவர்களை எங்கு கொண்டுசெல்கின்றது? பிரான்ஸ், ஸ்பெயின், போர்ச்சுகல் மற்றும் இப்பிரச்சினையில் ஐரோப்பா முழுவதும், ஏன் மிகவும் மோசமாகச் சுரண்டும் முதலாளித்துவ சமூகமான அமெரிக்காவிலும்கூட திடீரென எழும் ‘வால் ஸ்ட்ரீட்டை ஆக்கிரமியுங்கள்’ போன்ற மிகப் பெரும் இயக்கத்தை கண்ணுற்றது. அதில் லட்சக்கணக்கானோர் ஒவ்வொரு நாளும் வந்து வெட்ட வெளியில் உட்கார்ந்துகொண்டு தாங்கவொணா அடக்குமுறைக்கெதிராகப் போராடினர். இவ்வாறான இயக்கங்கள் ஏன் வளர்ந்து வருகின்றன? ஒவ்வொரு நாட்டின் போராட்டம் மற்றும் பல்வேறு நாடுகளில் நடைபெறும் போராட்டங்களின் உடனடிக் காரணம் வேறுபட்டிருக்கலாம். ஆனால் நெருக்கடிக்கான பிரதான காரணம் முதலாளித்துவ சுரண்டலும் முதலாளித்துவத்தின் கேடுகெட்ட ஆட்சியுமேயாகும். அது வளர்ச்சி குன்றிய நாடாக இருந்தாலும் அல்லது வளர்ச்சியடைந்த நாடாக இருந்தாலும் இதுதான் அடிப்படைக் காரணமாகும்.

அனைத்து முதலாளித்துவ நாடுகளிலும் பதட்டம் நிலவிக்கொண்டிருக்கின்றது. இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே லெனின் அவர்கள், முதலாளித்துவத்தின் ஏகபோக வளர்ச்சிக் கட்டம்தான் ஏகாதிபத்தியகட்டமென சுட்டிக்காண்பித்தார். ஏகாதிபத்தியம் என்பது நிதி மூலதனமானது வங்கி மற்றும் தொழில் மூலதனத்துடன் இணையும் ஒரு நிலையாகும். நிதி மூலதனம் வெளிநாடுகளுக்கு அவற்றின் மனித மற்றும் இயற்கை வளங்களை சுரண்டுவதற்காக ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஏகாதிபத்தியம் எனப்படுவது முதலாளித்துவ வளர்ச்சியின் உச்ச கட்டமாகும். இதன் பொருள், அதுதான் முதலாளித்துவ வளர்ச்சியின் இறுதிக்கட்டமாகும். அதற்கப்பால் முதலாளித்துவத்தின் வளர்ச்சி என்பது இருக்க முடியாது. லெனின் அவர்கள் மார்க்சிசத்தை வளமைபடுத்தும் போக்கில் இவ்வாறு கூறுகின்றார்: “முதலாளித்துவமானது இப்போது அழியும் தருவாயில் உள்ளது. அழியும் தருவாயில் எனக் கூறுவதன் பொருள் அது நெருக்கடியில் சிக்கி, தீர்க்கவியலாத நெருக்கடிக்குள் மூழ்கி செத்துக் கொண்டிருக்கின்றது என்பதாகும்”.

முதலாளித்துவமானது போருக்கு முன்பு அது கொண்டிருந்த அதன் ஒப்பீட்டளவிலான நிலைத்த தன்மையைக்கூட போருக்குப்பின் இழந்துவிட்டதென ஸ்டாலின் அவர்கள் இரண்டாம் உலகப் போருக்குப்பின்னர் கூறினார். நெருக்கடியானது முதலாளித்துவத்தை நன்கு பீடித்துள்ளது. ஸ்டாலின் அவர்களுக்குப்பின் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள், முதலாளித்துவமானது ஒரு நெருக்கடியிலிருந்து மீள்வது அதைவிடப் பெரிய மற்றும் ஆழமான நெருக்கடிக்குள் வீழ்வதற்காகத்தான் என்றார். நம்மைச்சுற்றி நாம் காண்கின்ற நெருக்கடியானது வேறெதிலுமிருந்து வெளிவரவில்லை. அது முதலாளித்துவத்தின் இயற்கையான போக்காகும். மக்களுக்காக இல்லாமல், முதலாளித்துவ ஆதரவு, ஏகாதிபத்திய ஆதரவு மற்றும் ஏகபோக ஆதரவு அரசாங்கமாக இருந்தால், அது இந்நெருக்கடிக்கு மேலும் ஒரு பரிமாணத்தை சேர்க்கின்றது. நமது நாட்டில் காங்கிரஸ் ஒரு முதலாளித்துவ ஆதரவு கட்சியாகும். பாஜகவும் ஒரு ஏகபோக முதலாளித்துவ ஆதரவு கட்சியாகும்.

இந்நெருக்கடியின் காரணத்தையும் குணாம்சத்தையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் ஒரு வேலையிலிருக்கின்றீர்கள் என வைத்துக்கொள்வோம். உங்கள் மகனுக்கு ஒரு வேலை கிடைக்குமென்ற உத்தரவாதம் எதுவுமில்லை. உங்கள் மகனுக்கு வேலை கிடைத்தாலும்கூட உங்கள் பேரனுக்கு வேலை கிடக்குமென்ற உத்தரவாதம் இல்லை. மாறாக, உங்கள் பேரனுக்கு நிச்சயமாக வேலை கிடைக்காதென்ற முடிவுக்கு நீங்கள் வரலாம். கோடிக்கணக்கான இளைஞர்கள் வேலையின்றி இருக்கின்றனர். முன்னதாக வேலையற்றோரின் எண்ணிக்கை 16 கோடியாக இருந்தது. அது இப்போது 20 கோடியைத் தாண்டியுள்ளது. பெரும் எண்ணிக்கையிலிருக்கும் வேலையற்ற இளைஞர்கள் யாவரும் தகுதிவாய்ந்த பொறியாளர்கள், மருத்துவர்கள், மேல்நிலைப் பட்டதாரிகள் மற்றும் பட்டதாரிகள் ஆவர். விவசாயிகள் கடன் வலைக்குள் சிக்கி தற்கொலை செய்து கொண்டிருக்கின்றனர். வாங்கிய கடனை திரும்பக் கட்ட முடியாமல் இருப்பது வெளிப்படையாகத் தெரிகின்ற காரணமாக இருந்தாலும் உண்மையான காரணம் ஈவு இரக்கமற்ற சுரண்டல் பொருளாதார அமைப்பு முறையேயாகும்.

இளைஞர்கள் நிராதரவற்றிருப்பதை உணர்ந்து கொண்டிருக்கின்றனர். பிஹெச்டி படிப்பு அல்லது எஞ்ஜினியர் படிப்பு முடித்திருந்தாலும் அவர்கள் வேலைக்காக அலைந்துகொண்டுதான் இருக்கின்றனர். பலரது விஷயத்தில், அவமானம் தாங்க முடியாமலும் குடும்பத்தினரே ஏற்றுக்கொள்ளாததாலும் இறுதியில் தங்களது வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் நிலைமைக்கு வந்துவிடுகின்றனர். நமது நாட்டில் இத்தகையதோர் துயர நிலைமை உருவாகியிருக்கின்றது. இது ஒரு அம்சமாகும். ஆனால், இதற்கெதிரான போராட்டங்கள் சுலபமாக வளர்ந்து வராமலிருப்பது மற்றொரு அம்சமாகும். காரணம் என்ன? ஏனெனில், சாதீயவாதம், மதவாதம், குறுகிய பிரிவினைவாதம் ஆகியன தூபமிட்டு வளர்க்கப் படுகிறது. சுரண்டப்படும் வெகுஜனங்களின் ஒரு பகுதியினரை மற்றொரு பிரிவினருடன் மோதவிட்டு அதில் ஆட்சியாளர்கள் ஆனந்தப்படுகிறார்கள் என்பதை சுரண்டப்படும் வெகுஜனங்கள் அறியாமலிருக்கின்றனர். ஏனெனில் அவ்வாறு பிரித்து வைத்திருப்பது ஆட்சியாளர்களை எதிர்த்துப் போராடாமல் வெகுஜன மக்களை தூரத்தில் தள்ளி வைத்திருக்கும்.

மதக்கலவரம் இல்லாமலிருக்கலாம். ஆனால், மத உணர்வுகள், சாதீய உணர்வுகள் அல்லது மொழி வெறிவாதம் ஆகியன இல்லாமலிருக்கின்றதா? அவை நிச்சயமாக இருக்கின்றன, அவை வளர்ந்து கொண்டிருக்கின்றன. அஸ்ஸாம் மாநிலம் மென்மேலும் பிளவுபட்டுள்ளது. இப்போது போடோ இனத்தவர்கள் வேறு மாநிலம் வேண்டுமென்கின்றனர். முன்பிருந்த பெரும்பான்மை தெலுங்கு மொழி பேசும் ஆந்திர மாநிலம் தெலுங்கானா என்றும் ஆந்திர பிரதேசம் என்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்துப் பிரிவானது எதற்காக? ஆந்திர மக்கள் ஏதும் நன்றாயிருக்கின்றனரா? விசாகப்பட்டினம் அல்லது ஶ்ரீகாகுளம் சென்று பாருங்கள். அங்கிருக்கும் கிராமங்களில் எத்தகைய வாழ்க்கையை அவர்கள் நடத்திக்கொண்டிருக்கின்றனர் என்பதைப் பார்த்திடலாம். தெலுங்கானாவில் கிராமங்கள்தோறும் நெருக்கடியை சந்தித்துக்கொண்டிருக்கின்றன. எனவே தோழர்களே, அனைத்து நெருக்கடிக்குமான மூலகாரணம் முதலாளித்துவமே என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். பிரிவினைவாத மனப்பான்மையை தூண்டிவிட்டுக்கொண்டு முதலாளித்துவ அரசியல் கட்சிகள் யாவும் மக்களை பிரித்தாளுகின்றன. இது ஒரு அம்சமாகும்.

இன்றைய சூழ்நிலைமையின் மிகவும் அபாயகரமான அம்சம், ஜனநாயகமே தீவிர அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதுதான். பேச்சுரிமை அதாவது கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரத்தின் குரல்வளை நெரிக்கப்பட்டிருக்கிறது. ஆட்சியாளர்கள் எதை விரும்புகின்றனரோ அதைத்தான் நீங்கள் பேசிட, செய்திட வேண்டும். நீங்கள் எதை உண்ண வேண்டுமென்பதைக்கூட ஆட்சியாளர்கள்தான் கட்டளையிடுகிறார்கள். உங்கள் உணவாக நீங்கள் எதனை உண்ணலாம், எதனை உண்ணக்கூடாதென்பதை ஆட்சியாளர்கள்தான் முடிவு செய்வார்கள். இதனால் உங்களது தனிப்பட்ட வாழ்க்கை பாதிப்பிற்குள்ளாகின்றது.

மற்றொரு விஷயம் தேசபக்தியாகும். அதாவது தேசம் குறித்த கருத்தாகும். தேசம் என்பது என்ன? அது என்ன இமய மலையா, சில்க்கா ஏரியா, காடுகளா அல்லது இந்தியாவைச் சூழ்ந்துள்ள பெருங்கடல்களா? இவையெல்லாம் நாட்டின் செல்வங்களாகும். ஒன்றுபட்ட தேசமென ஒன்று இருக்க முடியாது. எல்லா நாடுகளும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு தேசமானது ஆளுபவர்கள் மற்றும் ஆளப்படுபவர்கள், சுரண்டுபவர்கள் மற்றும் சுரண்டப்படுபவர்கள், ஒடுக்குபவர்கள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்கள் என இருவேறு முற்றிலும் வேறுபட்ட வகையான மக்களை கொண்டிருந்தால் அது ஒரு ஒன்றுபட்ட தேசமாக இருக்க முடியாது. இந்த இரண்டு பிரிவினருக்கும் பொதுவான நலன் என எதுவும் இல்லை. அவர்களது நலன்கள் முற்றிலும் எதிரெதிரானதாகும். தேசத்தின் 90 சதவிதத்தினர் ஒடுக்கப்பட்ட மக்களாகும். ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும், ஒருசில அடக்கியாள்பவர்களின் கைகளிலிருக்கும் தேசத்தின் செல்வங்களை திரும்பப்பெற போராடுபவர்களே உண்மையான தேசபக்தர்களாகும்.

கல்வித்துறையிலும்கூட ஆழமானதோர் நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. ஆட்சியாளர்களின் விருப்பப்படியே படிக்க வேண்டுமென மாணவர்கள் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். இன்று வேதங்களின் மாபெரும் சாதனைகளை படிக்க வேண்டுமென மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். ஆனால் ஏன்? விஞ்ஞானமானது இன்று மிகவும் முன்னேறியிருக்கிறது. விஞ்ஞானங்கள் மற்றும் அதன் முன்னேற்றங்களுக்கு ஈடுகொடுத்து நாம் சென்றிட வேண்டும். முன்னேறிய கருத்துக்களுக்கு நாம் நமது பங்களிப்பை செலுத்தவேண்டும். நவீன விஞ்ஞானத்தை தொடர்புபடுத்திப் படிக்காமல், விஞ்ஞானத்தைப் படிக்காமல் அதனைச் செய்திட முடியாது.

உதாரணமாக, நான் பௌதீகத்தில் மேல் நிலைப் பட்டதாரி. ஆனால் தத்துவம் அல்லது உயிரியலின் அரிச்சுவட்டைக்கூட என்னால் புரிந்துகொள்ள முடியாது. அப்படியிருக்கக்கூடாது. அது பிரித்து வைக்கப்பட்ட அறிவாகும். விஞ்ஞானத்தின் அனைத்துத் துறைகளையும் ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்திய அறிவானது அவசியமாகும். அவ்வகையான பாடத்திட்டம் வகுக்கப்படும் வரையில் உண்மையான கல்வியானது கிடைக்காது. அவ்வாறான கல்வியை நீங்கள் பெற்றிட ஆட்சியாளர்கள் ஒருபோதும் விரும்ப மாட்டார்கள். விஞ்ஞானமானது ஓர் பகுத்தாயும் சிந்தனையை வளர்த்

தொடர்ச்சி 8ம் பக்கம்

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No: TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# சீரழிந்த, மரணப்படுக்கையிலுள்ள முதலாளித்துவமே அனைத்து நெருக்கடிகளையும் உருவாக்குகிறது

7ம் பக்கத் தொடர்ச்சி

தெடுக்கிறது. உண்மைகளை தொடர்புபடுத்திப் பார்க்கும் சக்தியினை அது பெற்றுத்தருகிறது. அதுவன்றி நீங்கள் உண்மையைக் கண்டறிய முடியாது. ஆகவே, மனிதனுக்கு விஞ்ஞானம் முக்கியமானதாகும். எவ்வாறு ஒரு சூழ்நிலைமையை பகுப்பாய்ந்து பார்க்க வேண்டுமென்பதையும் எவ்வாறு உண்மைகளை கூர்ந்துநோக்கி ஒரு முடிவிற்கு வந்திடவேண்டுமென்பதையும் ஒருவர் நிச்சயம் அறிந்து கொள்ள வேண்டும். அதன் பின்னர் அதனை தர்க்கம் மற்றும் காரணகாரியம் எனும் உலைக்களத்தில் உரசிப்பார்த்து சரிபார்த்திட வேண்டும். விஞ்ஞானத்தில் சரிபார்க்கப்படாத எந்த கண்டுபிடிப்பும் உண்மையென ஏற்றுக்கொள்ளப் படமுடியாது.

இருக்கின்ற ஒரு சூழ்நிலைமையில் ஒரு பொருளைப்பற்றி பல உண்மைகள் இருக்க முடியாது. மின்சாரத்தை எடுத்துக்கொள்வோம். இந்துக்களாகிய எங்களுக்கு குறிப்பட்ட மின்சார விதி உள்ளதென்றோ, முகமதியர்களுக்கான மற்றுமொரு விதி உள்ளதென்றோ கூறிட முடியாது. அது போன்றே, இந்தியர்களுக்கு வேறுவகையான மின்சார விதியும் ஜப்பானியர்களுக்கு மற்றொரு மின்சார விதியும் இருக்கமுடியாது. என் முன்னிருக்கும் ஒலிவாங்கியானது (மைக்) அனைவருக்கும் ஒன்றேதான். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைமையில் ஒரு பொருளைப்பற்றிய உண்மையானது அனைவருக்கும் ஒன்றேதான். ஆக கல்வித்துறையில் பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன.

உதாரணமாக, சரஸ்வதி பூஜையானது பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட்டால் கிருஸ்துவ, முகமதிய, சீக்கிய, ஜைன மற்றும் புத்த மதத்தினர் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆக, நமது நாட்டில் இது போன்ற கவலைக்குரிய சூழ்நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மிகவும் அபாயகரமானது குருட்டுச்சிந்தனையாகும். குருட்டுத்தனம் மனிதனின் மிக மோசமான எதிரியாகும். விஞ்ஞானமானது அறிவைத்தந்து அக்குருட்டுத்தனத்தை தகர்த்தெறிகிறது. முதலாளித்துவவாதிகள் உண்மையையும் உண்மையான அறிவையும் கண்டு அஞ்சுகின்றனர். பூர்ஷ்வாக்கள் விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் வளர்த்திட விரும்பியதால் கோப்பர்னிகஸ், புரூனோ, கலிலியோ, நியூட்டன் மற்றும் ஐன்ஸ்டின் ஆகியோரது காலத்தில் விஞ்ஞானமானது வளர்ச்சியுற்றது. ஆனால் முதலாளித்துவம் இப்போது ஆழமான நெருக்கடியில் இருக்கின்றது. இப்போதிருக்கின்ற மிகப்பெரும் தொழில்நுட்ப வளர்ச்சியை முழுமையாகப் பயன்படுத்தி உற்பத்தி நடத்தப்பட்டால், அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு சந்தை ஏதுமிருக்காது. சுரண்டலின் காரணமாக வேகமாக ஓட்டாண்டிகளாகி வருவதினால், சந்தையானது மிகப்பெருமளவில் சுருங்கியிருக்கின்றது. உற்பத்தி செய்த பொருட்களை வாங்கிட மக்களிடம் பணமேதுமில்லை. சந்தையானது மேலும் சுருங்கி தொழிற்சாலைகளில் உற்பத்தியான மொத்த பொருட்களும் விற்கமுடியாலிருக்கின்றது. உற்பத்தியான பொருட்கள் கிடங்குகளில் தேங்கிக் கிடப்பதுடன் நிறுவப்பட்ட உற்பத்தித் திறனும் பயன்படுத்த முடியாமல் முடங்கிக்கிடக்கின்றது. அதன் தொடர்ச்சியாக, உற்பத்திக்கான புதிய முதலீடு ஏதும் செய்ய முடியாமல் இருப்பதால் மூலதனம் முடங்கிக்கிடக்கின்றது. முடங்கிய மூலதனம் முதலாளித்துவத்திற்கு ஆபத்தானதாகும். முடங்கிய மூலதனம் முதலாளித்துவத்தை சாகடித்துவிடும். ஆகையினால், அந்த மூலதனத்தை எங்கே பயன்படுத்துவது?

## பொருளாதாரத்தை இராணுவமயமாக்குதலும் பயங்கரவாதிகளை உருவாக்குதலும்

மூலதனத்தை எங்கே பயன்படுத்துவதென்பதற்கான விடை பொருளாதாரத்தை இராணுவமயமாக்குவது என்பதில்தானிருக்கின்றது. நமது நாட்டில் மட்டும்தான் இராணுவ பட்ஜெட் அதிகரித்துக்கொண்டிருக்கிறதா? இல்லை, இது உலகம் முழுவதும் அதிகரித்துக்கொண்டுதானிருக்கிறது. ஏன்? இராணுவமயப் பொருளாதாரத்தை அதிகரித்துக் கொண்டுபோவதால் மிதமிஞ்சிய ஆயுத, இராணுவத் தளவாட உற்பத்தியும் நடக்கிறது. இப்போது தோழர்களே, அவர்கள் இந்த இராணுவ உற்பத்தியை எங்கு பயன்படுத்துவார்கள்? தேங்கிக்கிடக்கும் ஆயுதங்களை எப்படி வெளியேற்றுவது? இப்போதைய சூழ்நிலைமையில் குறைந்தபட்சம் இப்போதைக்கு நேரடிப்போருக்கான வாய்ப்பு இல்லாததால், பயங்கரவாதிகளை உருவாக்கி ஓர் மறைமுகப் போர் ஏவிவிடப்பட்டிருக்கிறது. எனவே, அல்–கொய்தா, ஐஎஸ்ஐஎஸ் மற்றும் இதுபோன்ற அடிப்படைவாத மற்றும் தீவிரவாத சக்திகளுக்கு வடிவம் கொடுக்கப்பட்டு, அவை வளர்க்கப்பட்டும் ஆதரவளிக்கப்பட்டும் வருகிறது. ஊடக அறிக்கைகளின்படி, இத்தகைய தீவிரவாதிகள் சக்திவாய்ந்த ஆயுதங்களை வைத்திருக்கின்றனர். இந்த ஆயுதங்களை அவர்கள் எங்கிருந்து பெற்றுக்கொண்டிருக்கின்றனர்? அவைகளை உற்பத்தி செய்ய அவர்கள் தமக்கென சொந்த தொழிற்சாலைகளை வைத்திருக்கின்றனரா? பின்பு இந்த தீவிரவாத சக்திகள் அனைத்தும் யுஎஸ்ஏ மற்றும் பிற ஏகாதிபத்திய சக்திகளால் உருவாக்கப்பட்டவை என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். இது எவருக்குத் தெரியாது?

ஆப்கானிஸ்தானில் ‘கம்யூனிஸ்ட் ஆட்சி’ என அழைக்கப்பட்ட ஒன்று இருந்தது. அந்த ‘கம்யூனிஸ்ட் ஆட்சி’யை தூக்கியெறிவதற்காக தலிபான் சக்திகள் யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகளால் உருவாக்கப்பட்டு, பேணி வளர்க்கப்பட்டன. பின்னர், அதே சக்திகள் அமெரிக்காவை திருப்பித்தாக்கின.

ஈராக்கில் யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகள் சதாம் ஹுசேனை கொல்ல விரும்பினார்கள். எனவே ஈராக் நாடு பேரழிவு ஆயுதங்களை வைத்திருக்கின்றது என போலியாகச் சொல்லிக்கொண்டு, ஈராக் நாடு ராணுவரீதியில் ஆக்கிரமிக்கப்பட்டு, ஒன்றன் பின் ஒன்றாக நடந்த போர்களால் அது சுக்குநூறாக்கப்பட்டது. சதாம் ஹுசேன் மிகக்கொடூரமான முறையில் கொல்லப்பட்டார். இப்படித்தான் ஏகாதிபத்தியவாதிகளும் முதலாளித்துவவாதிகளும் ஆயுதங்களை விற்பதற்கான சூழ்நிலைமைகளை உருவாக்கிக்கொண்டிருக்கின்றனர்.

## முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சியை கட்டியமைப்பது அவசரக் கடமையாயிருக்கின்றது

நாம் சுருக்கமாகப் பார்த்தோமானால், முதலாளித்துவம் சாகும் நிலைமையில் அதன் இறுதிக்கட்டத்தில் நிற்கின்றது. பாட்டாளி வர்க்கம் தனக்குச் சொந்தமான புரட்சிகரக் கட்சியை உண்மையிலேயே கண்டுகொள்ள முடியுமானால், புரட்சிகரக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்க முடியுமானால், அவர்கள் சமூகத்தை மாற்றிடுவதற்கான போராட்டத்தை வெற்றிகரமாகத் தலைமை தாங்கிட முடியுமானால், முதலாளித்துவம் தூக்கியெறியப்படும். புரட்சிக்கான புறச்சூழ்நிலை கனிந்திருக்கிறது. முதலாளித்துவத்தை தூக்கியெறிவதற்கான அகச் சூழ்நிலையை நாம் தயார் செய்ய வேண்டியதிருக்கின்றது என தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் சுட்டிக்காண்பித்தார். நாம் உலகினையும் நமது நாட்டையும்கூட உற்று நோக்கினால், நிலைமை மிகவும் இருள் சூழ்ந்ததாக காணப்படும். ஆனால் இதற்கு மற்றொரு பக்கமும் இருக்கின்றது.

மக்கள் போராட்டத்தை விரும்புகின்றனர்; திடீரென வெடித்துக்கிளம்பி பெரியளவிலான போராட்டங்களில் மக்கள் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கு சரியான பாதையை காண்பிக்க வேண்டும். அவர்களுக்கு பலத்தையும், தைரியத்தையும் மற்றும் புரட்சியின் மீதான நம்பிக்கையையும் தர வேண்டும். நக்சலைட்டுகளைப் போலல்ல. நக்சலிசத்தை மார்க்சிசம் ஒருபோதும் அங்கீகரிக்கவில்லை. லெனின் அவர்கள் இக்கேள்வியில் தனது சொந்த சகோதரரையே எதிர்த்து நின்றார். தனிநபர் கொலையையும் தனிநபர் ரத்தக்களரியையும் நாம் அங்கீகரிப்பதில்லை. புரட்சியென்பதன் பொருள் சமுதாயத்தை மாற்றுவதற்காக உழைக்கும் வர்க்கத்தினரை மட்டுமின்றி பிற சுரண்டப்படும் வெகுஜனங்களையும் லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் உணர்வுபூர்வமாக அணிதிரட்டுவதாகும். அதுதான் புரட்சியாகும். எனவே தோழர்களே, சூழ்நிலைமை ஒருபுறம் கவலையளிப்பாதாக இருந்தாலும் மற்றொருபுறம் பிரகாசமாக இருக்கின்றது என்று நான் கூறுவேன். ஆனால் நாம் செயல்படவில்லையென்றால், சூழ்நிலைமை அப்படியே பிரகாசமாக இருக்காது. நாம் உணர்வு பூர்வமாக எதிர்வினை புரிந்து உழைக்கும் வர்க்கத்திற்கும் பிற சுரண்டப்படும் வெகுஜனங்களுக்கும் நம்பிக்கையளிக்க வேண்டும்.

நாம் இளைஞர்களையும் மாணவர்களையும் மென்மேலும் புரட்சிகர இயக்கத்தின் சுழல்வட்டத்திற்குள் கொண்டுவர வேண்டும். உயிர்த்துடிப்பும் ஊக்கமும் கொண்ட இளைஞர்கள்தான் புரட்சியின் உண்மையான சக்தியாகும் என தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் சுட்டிக்காண்பித்திருக்கின்றார். உயர்ந்த ஒழுக்கம், அறநெறி மற்றும் நன்மதிப்புக்கள் மீது ஆழமான ஈர்ப்பினைக்கொண்ட, சமுதாயத்திற்காகவும் சமுதாயத்தில் ஒரு தீவிர மாற்றத்தைக் கொண்டுவர அனைத்தையும் அர்ப்பணிக்க முடிந்த பிரகாசமான இளம் ஆடவர்கள் மற்றும் பெண்டிரை அதிக அளவில் கொண்டுவருவதன் மூலம் அவர்களால் உழைக்கும் வர்க்கத்தினரை அணிதிரட்ட முடியும்.

நமது நாட்டில் உழைக்கும் வர்க்கமானது சிதறுண்டு கிடக்கின்றது. குறிப்பாக பேரழிவு உலகமயமாக்கலை அறிமுகப்படுத்திய பின்னர், நமது நாட்டின் உழைக்கும் வர்க்கத்தின் நிலைமை இருள் சூழ்திருக்கிறது. தொடர்ச்சியான வேலையென்பது மென்மேலும் குறைக்கப்பட்டு அதே சமயம் சொற்ப ஊதியத்தில் வேலை செய்கின்ற ஒப்பந்தத் தொழிலாளர்கள் அதிகரித்தவண்ணமிருக்கின்றனர். ஒப்பந்தத் தொழிலாளர்க்கு உறுதியான வேலையேதுமில்லை, அவர்களுக்கு எதிர்காலமுமில்லை. நிலைமை இவ்வாறாக பெரும் இடர்பாடு கொண்டதாகவே இருக்கின்றது. அவர்களை நாம் அணிதிரட்ட வேண்டும். அமைப்புசாரா பிரிவைச்சார்ந்த தொழிலாளர்களை அணிதிரட்டி அவர்களை புரட்சிகர இயக்கத்தினுள் கொண்டு வருவது கடினமான போராட்டமே. அவர்களை அணிதிரட்ட ஆயிரக்கணக்கில் தொண்டர்கள் தேவைப்படுகின்றனர். நம்மைப் போன்றதொரு பரந்துபட்ட, 120 கோடிக்கு மேல் மக்கட்தொகை கொண்ட நாட்டில் பரந்துபட்ட உழைக்கும் வெகுஜன மக்களை அணிதிரட்டிட எத்தனை புரட்சியாளர்கள் தேவையாயிருக்கின்றனர்?

வெகுஜனங்களை அணித்திரட்டிடவும் அவர்களை புரட்சியின் பக்கம் கொண்டுவரவும் தேவைப்படும் பொறுப்பினை ஒருவர், தானே எடுத்துக் கொள்ள வேண்டும். வெறும் தீர்மானமாக அன்றி, புரட்சிகர இயக்கத்தினுள் வெகுஜனங்களை மென்மேலும் கொண்டுவர இத்தகைய உறுதிமொழியினை நாம் எடுத்தோமானால், ரஷ்யாவைப் போல நம்மால் இந்தியாவில் புரட்சியினை நிறைவேற்றிட முடியும். ரஷ்யப்புரட்சி நடைபெற்றபோது உலகம் முழுவதிலுமுள்ள தொழிலாளர்கள் ஈர்க்கப்பட்டனர். தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் சிந்தனைகளைக் கொண்டு நம்மைப்போன்றதொரு பரந்துபட்ட தேசத்தில் புரட்சியினைக் கொண்டுவர நம்மால் முடிந்தால், பின்னர் இவ்வொட்டு மொத்த உலகமே புரட்சியை நோக்கி விரைவாக நடைபோட்டுச் செல்லும். அந்நாள் வெகுதூரத்திலில்லை! நமது ஆசானும் வழிகாட்டியும் தலைவருமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களுக்கு மரியாதை செலுத்தி இத்துடன் நான் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**புரட்சி நீடூழி வாழ்க!**

**சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆப் இந்தியா (கம்யூனிஸ்ட்) நீடூழி வாழ்க!**

**தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் நீடூழி வாழ்க!**

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் , அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : அய்யனார் ஆப்செட் எண் 10, சுப்பாராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.sucicommunist.org